தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு — அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, புரட்டாசி 9 (24 9-'60). சனிக்கிழமை | இதழ் 15

இலங்கை அரசாங்கச் செலவுக்குப் பணமில்லையாம். அதை ஈடுகட்ட அங்கு போய் அன்னியர்களாய் வாழுகின்ற தமிழர்களிடம் 'தலைவரி' என்ற பெயரால் ஆளொருவர்க்கு ஆண்டுக்கு நானூறு ரூபாய் வீதம் பதிக்க திருமதி சிரிமா பண்டார நாயகாவின் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

செய்திப்பாட்டு

பெற்றதாய் நாட்டை விட்டுப்
பிறநாட்டுக் கேன்போனாய்?—தமிழா!
பிறநாட்டுக் கேன்போனாய்?—தமிழா!

பாடுபட்டு மாடெனவே பகலிரவாய் உழைத்தாலும்
பணங்காசு சேரவில்லை பட்டினியும் தீரவில்லை
கேடுகெட்ட பிழைப்பிதனைக் கேட்பவர்கள் யாருமில்லை
கேவலமாய்ப் போனதிந்த வாழ்வெனவே நினைத்தாயோ?
பெற்ற தாய்...........

கடல்கடந்து போனவர்கள் காசுபணம் சேர்த்தார்கள்
கண்ணியமாய்த் திரும்பிவந்து காட்சியளித் தார்களென்றே
உடன்நீயும் புறப்படவே ஊக்கமிகக் கொண்டாயே
உண்மையிலே கண்டதென்ன உத்தமனே சொல்லிடுவாய்!
பெற்ற தாய்...........

போயிருந்த நாட்டினிலே பொருள்சேர்த்துக் கொண்டாயோ?
புகழோடு சுகமாகப் பூமான்போல் வாழ்ந்தாயோ?
ஓயாமல் மறுபடியும் உழைத்துழைத்துத் தேய்ந்ததலால்
உருவான பலனேனும் உண்டாகக் கண்டாயோ?
பெற்ற தாய்...........

நீபிறந்த நாட்டைப்போல் நேர்மையுடன் அயலாரை
நெஞ்சார வரவேற்கும் பிறநாடென் றெண்ணினையோ?
வாய்திறந்து விழுங்குதற்கு வந்துவிட்டான் எனஉன்னை
வஞ்சகரை விரட்டுதல்போல் விரட்டிவிடத் துடித்தாரே!
பெற்ற தாய்...........

அடையாளச் சீட்டின்றி நடமாட முடியாதாம்
அயல்நாட்டுத் தெருக்களிலே! அநியாயம்! இதுமெய்யே!
தடையின்றி வாழ்வதற்குத் தலைவரியும் கொடுத்தால்தான்
தங்கியிருந் திடலாமாம்! தவறிவிட்டால் விரட்டுவராம்!
பெற்ற தாய்...........

கொண்டமனை யாட்டியுடன் கூடியிருந்து வாழ்வதற்குக்
கூடுதலாய் வரிக்கொடுக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.
வண்ணமுறு மக்களையோ வரவழைத்துக் கொள்வதற்கு
வழியில்லை எனச்சட்டம் வகுத்துவிட்டார் அங்கெல்லாம்!
பெற்ற தாய்...........

செத்தாலும் தாய்நாட்டில் சாவதிலே சிறப்புண்டு
சென்றுபிற நாட்டினிலே சீரழிய வேண்டாமே!
எத்தனைதான் வறுமையிலே இடருற்ற போதினிலும்
இனிமேலே பிறநாட்டை எண்ணாதே! எண்ணாதே!
பெற்ற தாய்...........

—நாகநாதன்.

நல்வழி

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

—ஔவையார்.

குறள் விழாக் கவியரங்கம்

7. திருவள்ளுவர் ஒரு சமத்துவச் சான்றோர்

கவிஞர் முத்துசம்பந்தன்.

நல்லோரே ! வணக்கம் !

தெள்ளுதமிழ் துள்ளுகின்ற திருவாய் கொண்டு
திலகமென இலங்குகின்ற கண்ண தாச !
அள்ளுசுவைக் கவியமுதம் படைத்து வந்த
அமைவுடைய கவிஞர்களே ! அமுதம், உள்ளம்
கொள்ளளவும் குடிப்பதற்கு வந்த காரைக்
குடிவாழும் நல்லோரே ! வணக்கம்; இங்கே
வள்ளுவனுர் சமத்துவஞ்சேர் சான்றேர் என்று
வரையறுக்கும் என்கவிக்கும் செவிம டுப்பீர்.

அகரமுதல் என்றதனுல் மொழிகள் யாவும்
அவ்வொளியின் அடிப்படையில் எழுந்த தாகும்;
தகராறு செய்வதற்கோ இடமே இல்லை;
சமத்துவத்தை மொழிமுதலில் காட்டி விட்டார்;
திகைக்காதீர் சிவனென்றும் பிரமன் என்றும்
திருமாலோ டருகர்நபி ஏசு புத்தர்,
முகவுரையில் இவரெல்லாம் ஒருவர் என்று
மொழிந்துவும் சமயத்தின சமத்து வந்தான்.

உலகைத் தன்னகத்தே கொண்ட நூல்

சிலம்பீன்ற செல்வனொடு கம்பன இன்னும்
சிறக்கின்ற பலபுலவா இருக்கும் போதில்
''உலகிற்கு வள்ளுவனைத் தந்த'' என்றே
உமாரப் பாரதியேன் சொல்லி வைத்தார்;
நிலைபுகழ் வள்ளுவனுர் செய்த நூலே
நீளுலகைத் தன்னகத்தே கொண்ட தன்றே !
பலபடியாய் அவர்கொள்கை உணர்ந்த தாலே
பாரதியார் அவ்வாறு சொல்லி வைத்தார்.

சமயத்தில் பொதுவுடைமை கொண்ட வர்க்குச்
சைவர்கள் திருநீற்றைப் பூசி விட்டுத்
தமக்காக நூலுமிட்டு நாய ரைாய்த்
தக்கபடி செய்துவிட்டார்; வைண வர்கள்
'நுமக்குத்தான் அவர்உரித்தோ' என்று சொல்லி
நுதல்தன்னில் முக்கோட்டு நாம மிட்டு
சமைத்திட்டார் ஆழ்வாராய்ச் சங்க டங்கள்
நமைச்சூழ; வள்ளுவரின் உண்மை காணேம்.

தெகிடுதத்தம் இனிப் பலிக்காது

ஒருகுலத்துக் கொருநீதி மனுவே சொல்லும்;
ஒன்றேனும் நமக்கெல்லாம் பொருத்தா தாகும்;
சிறுமனத்துச் சில்லரையார் செய்து வைத்த
தெகிடுதத்தம் இனியம்மா பலிக்கும் இங்கே ?
பெருமைமிகும் செய்தொழிலால் முன்னே நாமும்
பிரிவுபட்டோம் அதுவன்றி உயர்வு தாழ் |
கருத்தில்லை ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தோம்;
காலத்தால் மனம்மாறிக் காழ்ப்புக் கொண்டோம்.

சாதியெனும் பிளவெல்லாம் தத்தம் செய்கை
சாதிக்கச் செய்துவைத்த சதியே யாகும்;
ஆதியிலே இவையுண்டா ஆய்ந்து சொல்வீர் ?
'பிறப்பொக்கும் எல்லாவு யிர்க்கு'' மென்று
நீதிமுறை வழுவாத வள்ளு வர்தாம்
நெறியோடு கூறிவைத்த சமத்து வந்தான்
பாதியிலே வந்தவர்க்குச் சாப்ப றையாய்
பகைப்புலத்து வாளெனவே வாய்த்த தாகும்.

நுனிப்புல் மேய்ந்தாரோ ?

இனப்பொதுமை இலங்கிவந்த நாட்டில் இந்நாள்
இருக்கின்ற நிலைகண்டால் மனம்கொ திக்கும்;
தனக்குரிய சாதியிலே ஆட்சி யாளர்
சலுகைகளைக் காட்டுகிறுர் ஏனை யோர்க்குத்
தினையளவு நலமேனும் செய்தார் இல்லை;
திருக்குறளை நன்குணர்ந்தார் ஆட்சி தன்னில்
முன்னமேயே சிறந்திருந்தால் இந்தக் கேடு
முளைத்திருக்க வழியுண்டோ சொல்வீர் நன்றுய்.

' தனியொருவர்க் குணவில்லை என்று சொன்னுல்
தரங்கெட்ட செகத்தினையே அழிப்போம்'' என்றே
இனிதாகப் பாரதியார் சொன்னுர்; 'ஆகா !
எழுந்திடுவீர்' என்றிங்கே கதைக தைப்பார்;
நுனிப்புல்தான் மேய்ந்தாரோ அன்னுர் ? பாவம்
நோக்குகின்ற சமத்துவத்தை அங்கே காணுர்;
கனிமொழியால் வள்ளுவர்தாம் சொல்லி வைத்த
கருத்ததனை உணர்ந்திருந்தால் கேடு முண்டோ ?

எது சமத்துவம் ?

உணவொன்றுல் இவ்வுலகம் வாழ்வ தாகும்;
உணவின்றேல் உலகத்தில் இருப்போர் யார்யார் ?
'உணவுக்குப் போராடும் கூட்டம் ஓர்பால்,
உண்டுவிட்டுக் கொழுக்கின்ற கூட்டம் ஓர்பால்,
இணங்காத இவ்விரண்டு கூட்டந் தன்னை
இப்படியே விடுவதுதான் நன்றே சொல்வீர் ?
குணத்தீரே புரட்சிசெய வாரீர் ?' என்று
கூறுதல்தான் சமத்துவமா ? தெரிந்து சொல்வீர்.

உண்பொருளை முன்னிறுத்திக் குறளார் சொன்ன
உட்கருத்தை உள்ளடக்கி நோக்கி விட்டால்
விண்ணிடத்துத் தாவுகின்றுர் சுட்டிக் காட்டும்
வேறுன பொருளாதா ரந்தான் ஏனே ?
உண்பொருளைப் ' பகுத்துண்(டு) உயிர்கள் ஓம்பும்
உயர்கொள்கை நூலோர்கள் தொகுத்த வற்றுள்
உண்மையிலே தலை''யென்றே உரைத்தார் அன்றே !
ஒருநொடியே இதைஎண்ணிப் பார்த்தல் வேண்டும்.

திருக்குறளே சமத்துவத்தின் தலை நூல்

பொருளுக்கே ஆதாரம் தேடித் தேடிப்
புறநாட்டு நூல்களையே சான்று காட்டி
மருளுவது முறையாமோ ? அந்நூல் யாவும்
வள்ளுவர்க்குப் பின்னெழுந்து நின்ற வையே !
இருளழிக்கும் திருக்குறளே அவைகட் கெல்லாம்
ஏற்றபெருந் தலைநூலாய் இலங்கக் காண்க;
ஒருகுறளில் சமத்துவத்தை நிலைக்கச் செய்த
உயர்குறளார் சமத்துவச்சான் றேரே யாவர்.

''ஊருக்கே உபதேசம் உனக்கோ இல்லை
ஓர்ந்திடுக'' என்றுரைக்கும் சமத்து வந்தான்
யாருக்கு வேண்டுமிங்கே ? பொதுவு டைமை
ஏமாற்று வித்தைஎன எண்ண வைத்தார்;
நேருக்கு நேராக மறைவே இன்றி
நீதியுடன் எல்லோரும் ஏற்கும் வண்ணம்
பாருக்குத் தந்களித்த குறளில் எங்கு
பார்த்தாலும் பொதுவுடைமை பொலிந்து தோன்றும்.

காதலி தனி உடமைதான் ! சந்தேகமில்லை !

வள்ளுவனுர் பொதுவுடைமை போற்றி னாலும்
வரையறுத்த தனியுடைமை தன்னில் நன்றுய்
உள்ளமதைச் செலுத்திநின்று பேசு கின்றுர்:
உலகத்தில் தனியுடைமை யின்றேல் நாளும்
கள்ளமனம் பெருகிவிடும் பண்பு நீங்கும்;
கருத்திருந்தும் விலங்கெனவே வாழ்வு மாறும்;
விள்ளுகின்ற தனியுடைமை தன்னை ஈங்கு
விளக்கிடுவேன் பெண்மையெலாம் தனியு டைமை.

தன்னுடைய காதலிக்குக் கண்கள் யாவும்
தகைமைசேர் மலரெனவே அவனு டைய
நன்னெஞ்சம் எண்ணிவிட நெஞ்சே ! சிச்சி
நாள்தோறும் மலர்யாவும் பலரும் காணும்
தன்மையதாம். காண்பவர்கள் விருப்பு கின்ற
தண்மலரோ கண்களுக்குப் பொருத்த மாகும்;
பொன்போலும் மலரெல்லாம் பொதுவு டைமை
பொலிவுடைய காதலியோ என்னு டைமை.

அங்கே பொதுவுடைமை நாடவில்லை !

எல்லோரும் பார்த்துமகிழ் அழகு கொண்ட
எழிலார்ந்த மலர்களென்றன் காத லிக்குச்
செல்லாத உவமை'யென எண்ணி நின்று
'மலர்காணின் மையாத்தி நெஞ்சே'' என்பான்
நல்''லிவள்கண் பலர்காணும் பூவொக் கும்''மால்
நாடவில்லை பொதுவுடைமை அவ்வி டத்து
நல்லோரே ! இந்நாளில் அங்கும் சென்று
நச்சுகின்றுர் பொதுவுடைமை கொடுமை ஐயோ !

வள்ளுவனுர் கண்டிருக்கும் பொதுவு டைமை
வளரவழி செய்திடவே வேண்டும், இங்கே
எள்ளளவும் அவர்வழியில் மாற்றம் இன்றி
எல்லோரும் நல்வழியில் செல்லல் வேண்டும்,
ஒள்ளியராய்ப் பெரும்புகழை அடைய வேண்டும்.
உள்ளத்தைப் பண்படுத்தி வாழ வேண்டும்.
தெள்ளியராய் வாழ்கின்ற உங்கட் கெல்லாம்
செலுத்துகிறேன் வணக்கமிக, வணக்கம் நன்றி!

கண்ணதாசன் பின்னுரை.

அரும்பெடுத்த இளமீசை அசைந்து காண
அழகுதமிழ்ச் சம்பந்தன் சமத்து வத்தைச்
சுரும்பெடுத்து வந்ததுபோல் எடுத்து வந்து
சுவைகொடுத்துச் செவியிடையே வடித்து வைத்தார்.
கரும்பெடுத்துத் தின்பதுபோல் நாமும் தின்றேம்
கண்ணெதிரில் தலைமுறையில் சமத்து வத்தைப்
பெரும்பெருமை காண்போமா ? நடக்கும் அந்தப்
பெருவாழ்வு கிடைக்கும்நாள் வருவ துண்டோ ?

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 24-9-'60 இதழ் 15

சிந்துத் தகராறு தீர்ந்தது!

சிந்து ஆறு!

இந்தச் சிந்து ஆற்றின் நீரைப் பங்கிட்டுக்கொள்வதிலே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே தகராறு இருந்து வந்தது.

இந்தத் தகராறு பதின்மூன்று ஆண்டுக் காலமாக இருந்து வந்தது.

அதாவது,

இந்த நாடுகள் இரண்டும் வெள்ளைக்காரனிடமிருந்து சுதந்திரம் வாங்கிய காலத்திலிருந்தே இந்தத் தகராறு இருந்து வந்திருக்கிறது.

இந்தத் தகராறு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள பல தகராறுகளிலே ஒன்று.

இந்தத் தகராற்றைத் தீர்த்து வைப்பதற்காக உலக பாங்கித் தலைவர் திரு. இலிப் பெரும்பாடுபட்டார்.

இந்தத் தகராற்றைத் தீர்த்துக்கொள்வதற்காக இரண்டு அரசாங்கங்களும் இதுவரை மொத்தம் மூன்று கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கின்றன.

இந்த மூன்று கோடிக்கு மேற்பட்ட ரூபாயும் அந்நியச் செலாவணி ரூபாயாகவே செலவாகியிருக்கிறது. உள்நாட்டுச் செலாவணியின் மதிப்புப்படி பார்த்தால் அது இன்னும் அதிகச் செலவாகக் காட்சியளிக்கும்.

இப்போது,

உலக பாங்கித் தலைவர் அயராது செய்த முயற்சியின் பயனாகவும். இரண்டு நாட்டினிடையேயும் ஏற்பட்ட தகராற்றைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நல்ல மனப்பான்மையின் பயனாகவும், கடந்த 19-9-60-ம் நாளன்று நல்லொப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது.

இந்த நல்லொப்பந்தத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் சார்பாகப் பண்டித நேருவும், பாகிஸ்தான் சார்பாக. அந்நாட்டுத் தலைவர் அயூப்கானும்- உலக பாங்கியின் தலைவர் திரு. இலிப்பும் கூடக் கையெழுத்திட்டுள்ளனர்.

இனி சிந்து ஆற்றின் நீரைப் பயன்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப் பெறும். இதற்காக ரூபாய் நானூற்றைம்பது கோடி செலவிடப்படும்.

மேலை நாடுகளும், உலக பாங்கும் சேர்ந்து 333 கோடி டாலர் உதவியளிக்கின்றன.

இந்தியா 83 கோடி ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

பாகிஸ்தான் 64 கோடி ரூபாய் செலவிடப் போகிறது,

இந்த ஒப்பந்தத்தின்படி சிந்து ஆற்றுத் தண்ணீரில் நூற்றுக்கு எண்பது பங்கு பாகிஸ்தானுக்குப் பயன்படும் என்றும், இருபது பங்குதான் இந்தியாவுக்குப் பயன்படும் என்றும் காங்கிரசுப் பத்திரிகைகள் ஓலமிடுகின்றன.

இமாசலத்திலும் ராஜஸ்தானத்திலும் செய்வதாக இருந்த சில நீர்ப்பாசனத் திட்டங்களை இந்தியா கைவிட்டுவிட வேண்டி வந்துவிட்டதாக அவை கூக்குரலிடுகின்றன.

அதே சமயம், தகராறு தீர்ந்து நல்லுறவு ஏற்பட்டதற்காக மகிழ்ச்சியடைவதாகப் போலிச் சமாதானம் கூறிக்கொள்கின்றன.

எப்படியிருந்தாலும், இந்திய-பாகிஸ்தான் உறவில் இந்த நல்லொப்பந்தம் ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்கியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

நேரு பண்டிதரும் அயூப்கானும் கூறியுள்ளதுபோல், இந்த ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது என்பதில் ஐயமில்லை.

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து காஷ்மீர் விவகாரம்பற்றியும் பேசியிருக்கிறார்கள் என்பது, மேலும் ஒரு நல்ல முடிவு ஏற்படக்கூடும் என்பதற்கு முன் அறிவிப்பாக இருக்கிறது.

இதைத் தொடர்ந்து காஷ்மீர்த் தகராறும் தீரவேண்டியது இன்றியமையாதது என்றே நாம் சொல்லுவோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காஷ்மீர்த் தகராறு உடனடியாக முடிவுக்கு வரவேண்டியது பெரிதும் எதிர்பார்க்கக் கூடிய தாகும்.

காஷ்மீர்ப் பிரச்சினையிலும் இருநாடுகளும் விட்டுக் கொடுத்துப் பேச வேண்டும்.

ஏனெனில், சீனக்காரன் இப்பொழுதே இந்திய எல்லைக்குள் நுழைந்து விட்டான்.

இந்தச்சமயத்தில் அண்டை நாடுகள் இரண்டும் ஒன்றுக் கொன்று உறவு மனப்பான்மையுடன் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

சிந்து ஆற்றுத் தண்ணீர் விஷயத்தில் ஏற்பட்ட இந்த உறவு, காஷ்மீர்ப் பிரச்சினையிலும் ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்குப் பயன் படுவதாக அமைய வேண்டும்.

சிந்து ஆற்றுத் தண்ணீர்ப் பங்கீட்டில் ஒரு நல்ல முடிவுக்கு வந்த பண்டிதரின் பார்வை தென்னாட்டுப் பக்கமும் திரும்புமானால், நாம் அவருடைய ஆட்சியில் நாணயம் இருக்கிறதென்று நம்ப முடியும்.

ஆந்திரமாநிலமும், கேரளமும் ஆற்றுத் தண்ணீர் விஷயத்தில் காட்டுகின்ற வரட்டுப் பீடிவாத குணத்தை மாற்றிட நேரு உழைப்பாரானால், இவர் இந்த நாட்டு மக்கள் அனைவரிடமும் ஒரே மாதிரியான நல்லெண்ணம் கொண்டிருக்கிறார் என்று நம்பலாம். இல்லாவிட்டால், அவர் வடநாட்டுப் பிரச்சினைகளில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளவர் என்றும். வடக்கு தெற்கு என்ற பேதத்தை வளர்க்க நினைக்கிறவர்களுக்குப் பக்க மேளம் கொட்டுகிறவர் என்றும் தான் நாம் நினைக்க வேண்டும்.

இதுவரை அவர் நடந்து வந்திருக்கிற மாதிரியைப் பார்த்தால் இந்தக் கருத்து—இந்த நினைப்புத்தான் சரியான தென்று நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர் இனிமேலாவது தம்முடைய வேற்றுமை மனப்பான்மையுள்ள போக்கை விட்டுவிடுவாரானால் தான். தென்னாட்டு மக்கள் ஓரளவுக் காவது அவர் நாணயத்தில் நம்பிக்கை கொள்ள முடியும். இல்லா விட்டால், அவர் - தென்னாட்டுப் பிரச்சினைகளில் அக்கரை காட்டாத நேரு - தென்னாட்டின் வெறுப்புக்கு முற்றிலும் உரியவராகி விடுவார் என்பதில் ஐயமில்லை.

"வழியில்லை"-தென்னகத்திற்குத் தில்லி சொல்லும் பதில்!

நேரு பண்டிதரின் தலைமையில் இயங்குகின்ற இந்தியத் துணைக்கண்டத்து மத்தியப்பேரரசு தென்னகத்திடம் எவ்வளவு வெறுப்பாக நடை பெற்று வருகிறது என்பதற்கு இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பலவகையிலும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

அதிலே ஒன்று இருப்புப் பாதைப் பிரச்சினை-

தென்னகத்திற்குத் தேவையானவை ஏழு இருப்புப் பாதைகள்!

ஆனால், ஏழையும் ஒன்றாகக் கேட்டால், இந்தியப் பேரரசு எங்கே தரப் போகிறது என்ற எண்ணத்தினால்-தாழ்வு மனப்பான்மையினால், இதில் மூன்று இருப்புப்பாதைகளை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சென்னை அரசு வேண்டியுள்ளது.

இந்த வேண்டுகோளை இப்போதுதான் புதிதாகவிடுக்கின்றதா இந்த மாநில அரசு, என்று கேட்டால், இல்லை என்றே தெரிகிறது. முதல் திட்ட காலத்திலேயே கேட்டுவிட்டது. ஆனால், அடுத்த திட்டத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று முதல் இரு திட்டங்களிலும் சேர்க்காமல் தள்ளிவிட்டது இந்திய அரசு. இப்போது மூன்றாவது முறையாக அழுத்தந் திருத்தமாக, "தமிழ்நாட்டில் ஒரு மைல் நீளம் கூட புதிய இருப்புப்பாதை போட வழியில்லை" என்று இரயில்வே அமைச்சர் ஜகஜீவன் ராம் பதிலளித்துவிட்டாராம்,

தில்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பிய பக்தவத்சலனார், பத்திரிகை நிருபர்களிடம் மேலிடத்தார் தந்த இந்தப் பதிலை அப்படியே கிளிப்பிள்ளைபோல் திருப்பிச் சொல்லியிருக்கிறார்.

கொஞ்சமாவது மான அவமான உணர்ச்சியிருந்தால், இந்த அமைச்சர்கள் இந்தப் பதவிகளில் உட்கார்ந்து ஈயோட்டிக்கொண்டிருப்பார்களா?

வடக்கு வளர்கிறது-தெற்கு வஞ்சிக்கப்படுகிறது என்பதைக் கண்ணாரக் கண்ட பின்னும் என்ன வேண்டியிருக்கிறது "ஏக இந்தியா.?" 'பாரத சோதரர்கள் நாமே!" என்று திரும்பத் திரும்பக் காமராசரும் சுப்பிரமணியமும் புக்தவத்சலமும் பல்லவி பாடிக்கொண்டிருந்தால் போதுமா? வடக்கில் இருப்பவர்கள் நம்மை அலட்சியமாகத்தானே-யாரோ எவரோ என்றுதானே எண்ணுகிறார்கள், நடத்துகிறார்கள்?

திராவிடம் தனியரசாக மலர்ந்தால்தானே. எந்தத் திட்டத்திற்கும் நாம் இவர்கள் கையை எதிர்பார்க்காமல் செயற்பட முடியும்? இதை இந்த அமைச்சர்கள் அறியாத தேன்? அறிந்தும் அறியாதவர் களைப் போல் இருப்பது ஏன்?

ராசிபலன்

பூவை அமுதன்

சின்னஞ்சிறு குடிசையின் முன்பாகக் கயிற்றுக்கட்டிலின்மேல் தன்னந் தனியாக அமர்ந்திருந்தான் அவன், சோகத்தின் மொத்த உருவமாக! பிறந்த நாளிலிருந்து, துன்பத்தை மட்டுமே அனுபவித்திருந்த அந்த இளைஞனின் இதயக்கரையைத்தாங்க முடியாத துயர அலைகள் மோதி மோதி அடித்தன. அவனுக்கு ஆதரவாக இருந்து அன்புகாட்டி, அவனுக்காகவே வாழ்ந்திருந்த அந்த உயிர், இந்தப் பொல்லாத உலகத்தை விட்டுப் போய்விட்டது. அனாதைச் சிறுவனாகிவிட்ட அவன் புறக்கண்களின் முன்பாக ஆயிரமாயிரம் ஒளி விளக்குகள் அணி செய்துவைத்தாலும், அவன் உள்ளத்தே சூழ்ந்துவிட்ட காரிருளை ஒழித்துவிட முடியுமா? அந்த காரமான உலகத்திலே அநாதையாக, அறியாச் சிறுவனாகத் தான் மட்டுமே தனித்து அல்லற்படுவதைப் போன்று அழுது அழுது அயர்ந்துபோனான் அருள்மணி.

"எப்படி வாழ்வேன், இனி? எனக்கென்று யார் இருக்கிறார்கள்?" பிஞ்சு நெஞ்சத்தைக் கசக்கிப் பிழிந்து கண்ணீரைக் கொட்ட வைத்தது இந்தக் கேள்வி!

கானகத்துப் புள்ளினமாய், துள்ளி ஓடும் மானினமாய், ஆறறிவில்லா ஏதோ ஒரு வேறினமாய்த் தானிருந்திருந்தால், காப்பாற்றுவாரின்றிக் கதியற்றுக் கலங்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லையே, அருள்மணி? அவன் மனஉணர்வு படைத்த மனித இனத்தவனாகப் பிறந்ததனாலன்றோ, மனங்குமுறி வாழும் வகையறியாமல் திகைத்துவிட்டான்.

ஏதேதோ எண்ணங்கள் அவன் இதயமேடையிலே கட்டிப்புரண்டன. இறுதிவரையிலும் உறுதியான எந்த முடிவும் தோன்றாதவனாய்க் கட்டிலை விட்டு எழுந்தான். கண்ணீரை வழித்துவிட்டு மெல்ல மெல்ல இருள் படிந்து வந்த மண்ணையும் விண்ணையும்நோக்கினான்.

"இருள் சூழ்கிறது. காலதேவன் ஓடிக்கொண்டிருக்கிறான். நாளைக் கதிரவன் வருவான். இருள் ஓடிவிடும் ஒளி எழுந்து நிலவும்; ஆனால் என் வாழ்வில்...? ஒளியேது...! ஒரே இருள்! ஒரே இருள்!!" அவன் வாய் முணு முணுத்தது. தாமாக அவன் கால்கள் நகர்ந்தன. ஏதோ ஒன்று தட்டுப்படவே தாமாகவே நின்றன கால்கள்! தட்டுப்பட்ட பொருள் என்னவென்று கண்கள் கண்டு கொண்டுவிட்டன.

கண்ணிலே பட்ட அந்தக்கயிற்றுச் சுருளை எடுத்துக்கொண்டு குடிசைக் குள்ளே நுழைந்தான். கூரையை நிமிர்ந்து நோக்கினான். இதய அணையை உடைத்துக்கொண்டு பீறிட்டுப் பாய்ந்தது துயரவெள்ளம். குளமாகிக்கிடந்த கண்களைத் துடைத்துக்கொண்டு, சரசரவென்று கூரைக்கு ஏறிக் கயிற்றைக் கட்டிவிட்டான். சுருக்கிட்டுத் தொங்கி ஆடிக்கொண்டிருக்கும் அந்தக்கயிற்று வளையத்தைக் கண் கொட்டாமல் பார்த்து நின்றான். வறட்டுச்சிரிப்பு! 'தன் வாழ்விதுதான்' என்பதை முடிவு கட்டியதால்!

இருள் சூழ்ந்துவிட்டது குடிசைக்குள்! இளைஞன் அருள்மணியின் நெஞ்சத்தில் அடைந்துகிடந்த இருளை விடவா? துணிந்துவிட்டான். கயிற்று வளையத்தைக் கழுத்திலே மாட்டிக் கொண்டு கண்களை மூடினான்.

"மணி!" என்ற குரல் கணீரென்று கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பியவன், தன் பின்புறத்தில் ஆசிரியர் நல்மொழியார் சாந்தமே உருவாக நின்றுகொண்டிருப்பதைக்கண்டான். அவர், அவன் கழுத்தை வளைத்திருந்த கயிற்றை எடுத்தார்.

"அறிவுள்ள உயிரை அழித்துவிட அறிவில்லாத பொருட்களுககுத்தான் எவ்வளவு ஆசை!" புன்முறுவலோடு கூறினார் நல் மொழியார்.

"ஐயா!" என்றவன், அதற்குமேல் பேசமுடியாதவனாகப் பொங்கி வந்த வேதனையைப் பொறுத்துக்கொள்ள வியலாமல், பசித்த குழந்தை விசித்து விசித்து அழுவதைப்போல், அங்கமெலாம் குலுங்கக் குலுங்க அழுதான் அருள்மணி. ஆசிரியர் அன்பாக அவனைப்பற்றி அணைத்து ஆறுதல் கூறினார். அவர் கூறிய வார்த்தைகள் வெந்துயரால் மிக மிக நொந்து போயிருந்த அவன் சிந்தைக்கு இதமாக இருந்தன.

"சரி, புறப்படு மணி! படித்த பிள்ளை நீ. பகுத்தறிவோடு நடந்துகொள்ளவில்லை, பார்! எல்லாம் கேள்விப்பட்டுத்தான் நான் ஓடி வந்தேன். நல்ல வேளை...நான் முந்திக் கொண்டுவிட்டேன். இல்லையென்றால்...?சே! என்னப்பா அருள்... இப்படியா நடந்துகொள்வாய்! இடுக்கண் வருங்கால் நகுக என்று எடுத்துச் சொல்லிப் போன வள்ளுவனின் வார்த்தைக்குப் படித்தவர்களாவது மரியாதை தர வேண்டாமா?"

"ஐயா! இனி நான் வாழ்ந்துதான் யாருக்கு என்ன பயன்?"

"சரி, செத்துத்தான்யாருக்கு என்ன பயன்? அதைச் சொல்லேன்! மணி! உயிர் பிறக்கும்போது அடைகிற துன்பம், இறக்கும்போது இருப்பதில்லையோ என்னவோ? ஆகவேதான் எல்லாரும் இலகுவில் சாகத் துணிந்துவிடுகிறார்கள்! சரி, போனது போகட்டும், இனி உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நீ செத்துப் போனவனாகவே இரு. ஆனால் புத்துயிர் பெற்றிருக்கும் அருள்மணி என்னுடையவன். அவனுடைய வாழ்க்கையின் பொறுப்பு, இனி என்னுடையது! பழைய அருள் மணியை வேதனைகள் சூழ்ந்து விழுங்கி விட்டதாகவே இருக்கட்டும்."

நல்மொழியார் கூறிக்கொண்டு வந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு மௌனமாகிக் கிடந்த அருள்மணி, அவனையே நம்பமுடியாதவனாகி விட்டான்! உலகத்தில் 'நல் மொழியாரைப்போன்ற மனிதர்களும் ஒருசிலர் இருக்கத்தான் செய்கின்றனர் என்ற அந்த உண்மை அவனுக்கு அப்போதுதான் புலனாகியது. சிறுவயதே ஆகியிருந்தபோதும், எத்தனையோ பெரிய விஷயங்கள் அருள்மணிக்குப் புரிந்துபோயிருந்தன. ஆகவேதான், 'உலகத்தில் அநாதைகளை ஆதரிக்கும் உத்தமர்களை நடைமுறை வாழ்க்கையில் காண்பதரிது; சொல்வன எல்லாம் எந்தக் காலத்திலோ நடந்தனவாகயிருக்கக்கூடும்' என்று மட்டும் தெரிந்துவைத்திருந்தான். இப்போது தான் ஒரு புதிய உலகத்துக்குப் புறப்பட்டுப் போவதைப்போல் தமிழாசிரியரைப் பின்தொடர்ந்து போனான் மணி.

★

அருள்மணி, பூமாலைக்கு ஒரே பிள்ளை. அவன் உருவாகிக் கருவுக் குள்ளிருக்கும்போதே பூமாலையின் கணவன் பொன்னுவேல் கண்ணை மூடி மண்ணுக்குள் சென்றுவிட்டான். எல்லோருக்கும் வந்த நச்சுக் காய்ச்சல்தான் பொன்னுவேலுக்கும் வந்தது. ஆனால் அதன் பொல்லாத பசி அந்த நல்லவனை விழுங்கித்தான் ஏப்பமிட்டு அடங்கியது.

பதியற்றுப்போனதோடு கதியற்றும் போய்விட்ட பூமாலை, 'விதி யிதுவோ' எனக் கதறிக்கொண்டு தன் அண்ணன் சாத்தப்பன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள், எட்டுமாத கர்ப்பினியாக. சாத்தப்பன், தன் தந்தையின் இளையதாரத்துப் பெண்ணான பூமாலையின் நிலையறிந்து, மனமிரங்கி ஆதரித்து வந்தான். அண்ணனுக்கு வாய்த்திட்ட அல்லியும், 'மூளி அலங்காரி'யாயில்லாமல், பூமாலைக்கு ஆறுதல் கூறி ஆதரித்து வந்தாள்.

பூமாலை தன் கைமைக் கோலத்திலேயே ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்தாள். பூமானின் பிள்ளையைப் போல, தாங்கள் கண்டெடுத்த புதையலைப்போல மதித்து, பூரிப்போடு வளர்த்தனர் சாத்தப்பனும் அல்லியும். அருள்மணி ஆண்டுகள் மூன்றைத் தாண்டியபோது, மாமன் சாத்தப்பன் மாண்டுவிட்டான்.

சாத்தப்பன் ஒரு சுரங்கத் தொழிலாளி உயிரைப் பணயம் வைத்து உழைத்து வந்தவன் உயிரைச் சுரங்கத்துக்கே ஒப்படைத்துவிட்டான் ஒருநாள். திடீரென்று சுரங்கத்திலே விபத்து ஏற்பட்டதால் செத்துப் போன பத்துப்பேரிலே சாத்தப்பனும் ஒருவன்!

உலகத்துச் சோக இருளையெல்லாம் தன் உள்ளத்துக்குள்ளே விழுங்கியிருந்த அல்லிக்கு, ஆறுதல் கூறவந்தவர்களுள் சிலர், அவளுக்கு ஆகாத வார்த்தைகளும் சொல்லிச் சென்றனர். அவள், அவர்கள் வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள். "கருவிலே இருக்கும்போதே அப்பனை அனுப்பிவிட்டான். இப்போ, தாய் மாமனையும் வாயிலே போட்டுக் கொண்டான். இந்தப் பாவிமகன்! இன்னும் யார் யாரை விழுங்கக் காத்திருக்கிறானோ?" என்று அக்கம் பக்கத்தார் தத்தமக்கே கேடு வந்துவிட்டதைப்போல் அரற்றிக்கொண்ட போது பூமாலை, உள்ளம் புழுங்கிப் போனாள்.

தான் கணவனை யிழந்தது, தன் அண்ணன் இறந்தது எல்லாம் தன் மகனாலா? தன் குடி பட்டதும், தன் தமையன் குடி கெட்டதும் தன் மகன் அருள்மணியினாலா? அவன் 'ராசிபலன்' மற்றவர்கள் சொல்வதைப்போல் மட்டமானதுதானா? என்பனபோன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் அவள் மண்டையைக் குடைந்து அல்லற்படுத்தின. தன் குடி எனும் செடியிலே பூத்த ஒரு மலர்நறுமணம் கமழ்வதை விடுத்துப் பிறர் வெறுக்குமளவுக்கு, வேண்டாத நாற்றத்தையா வீச வேண்டும்? என்று அவள் எண்ணி எண்ணி அனுதினமும் அழுது வந்தாள்.

அல்லியின் வயிற்றிலே ஒரு 'பூ'ப் பூக்கு முன்பாகவே சாத்தப்பன் வாழ்வை முடித்துக்கொண்டுவிட்டாரே! இல்லாமற் போய்விட்டதே தன் வயிற்றில் பிறந்த மகன், தான் புகுந்த குடியைக் கெடுத்ததோடின்றி, தன் தாய்க்குடியையும் அல்லவா தழைக்கச் செய்யாமல் அழித்துப் போட்டுவிட்டான்?

இத்தகு எண்ணங்களால் பித்துப் பிடித்தவள்போலானாள் பூமாலை. 'இந்தப்பயல் மணி செத்துப்போவதே மேல்' என்றும் சில சமயம் எண்ணமிட்டாள். ஆக, நாளடைவில் சொந்த மகன்மீதே அவளுக்கு வெறுப்பு வளர்ந்தோங்கியது. உலகமறியாக் குழந்தையை ஒதுக்கித் தள்ளினாள். ஆனால் அவளுக்கு மாறாக, அல்லி முன்னைவிட அருள்மணியின்மீது அதிக பாசம் காட்டினாள். பெற்ற தாயினும் பெரியதாயாகவிருந்து குறையேதுமின்றிக் குழந்தையை வளர்த்தாள். ஊராரின் தூற்றுதலை உண்மையென நம்பி, தாயுள்ளத்தை இழந்துவிட்ட பூமாலை, அல்லியின் பிள்ளைப் பாசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனாள்.

ஒரு நாள் அடுப்பு எரிக்கச் சுள்ளி பொறுக்கத் தரைக் காட்டுப் புறம் சென்ற பூமாலை திரும்பி வரவேயில்லை. பயந்து பதறிக்கொண்டு தேடிச் சென்றபோது முறிந்து விழுந்த மரக் கிளைபோல், மரத்தடியிலே விழுந்து கிடந்த பூமாலையின்

—9-ம் பக்கம் பார்க்க—

"கழுதை காவெனக்
கண்டுநின் ருடிய
சொறிநாய்
தொழுது மீண்டும் அக்
கழுதையைத் துதிசெய
உடனே
பழுதி லாநமக் கார்நிகர்
என்னவே பகரும்
முழுது மூடரை மூடர்கொண்
டாடிய முறைபோல்"

இந்தப்பாட்டு, விவேக சிந்தாமணி என்னும் நூலில் படித்ததாக நினைவு!

8-9-60-ம் நாள் சட்டமன்றத்தில் கடன்கார மந்திரி சுப்பிரமணியம் (சென்னை அரசில் பொருளாதாரம் இன்றி, கடன்களே மிகுந்திருப்பதால் நிதிமந்திரி என்பது பொருந்தாது) பேசி இருக்கிறார்:-

"நாட்டில் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட உணவு, உடை, மருத்துவ வசதி, போக்கு வரத்து, தொழில் உற்பத்தி ஆகிய இவை பெருகியுள்ளன, அணைக் கட்டுத் திட்டங்கள் பல மேற் கொள்ளப் பட்டிருக்கின்றன. இவை இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள், என்று.

நாட்டில் கண்கூடாக நாம் என்ன காண்கிறோம்? வேலையில்லாக் கொடுமை, வரிச்சுமை, விலைவாசி உயர்வு, தற்கொலை, பரதேசியாகுதல், கற்பை விலைகூறுதல், கள்ளத்தோணி ஏறுதல் ஆகிய இவைதாம்!

ஆனாலும் அமைச்சர் சுப்பிரமணியம் துணிச்சலோடு வளம் பெருகி இருக்கிறது என்கிறார் பட்டப் பகலை இரவென்று கூறுவதுபோல!

அமைச்சர் சுப்பிரமணியத்தின் புள்ளி விவரங்களில்--5 ஆண்டுத் திட்டங்களின் கணக்குகளில், நாட்டில் வளம் பெருகி இருப்பதாகக் காணப்பட்டால், அது விந்தியத்திற்கு வடக்கிலே ஏற்பட்ட வளத்தைக் குறிப்பதாகவே இருக்கும்.

அரசாங்கத்தின் இத்தகைய புள்ளி விவரங்கள் அனைத்திந்தியாவின் மொத்தக் கணக்காகவே இருக்கும்! அதை, ஆதாரமாக வைத்துக் கொண்டு, திராவிடத்தில் - தமிழகத்தில் வளம் பெருகி இருப்பதாகக் கதைப்பது மூடத்தனமன்றி வேறென்ன?

கள்ளத்தோணியில் சென்று கடலில் மிதக்கும் பிணங்களை விட அரசாங்கத்தின் சாதனைக்குச் சான்று என்ன வேண்டும்?

"பத்திரிகை வரை எட்டுகின்ற கள்ளத்தோணிப் பிணங்கள் மிகமிகக் குறைவு! எவருக்கும் தெரியாமல் கடலில் அமிழ்ந்து - அயல் நாடு சென்று பிழைக்கும் ஆசையால - பிணமாகி மறைந்து கொண்டிருப்பவர்களுக்குக் கணக்கே கிடையாது;' என்று சொல்கிறார்கள், நெல்லை, இராமநாதபுர மாவட்டக் கடற்கரை ஓரத்தில வாழ்பவர்கள்! என்ன! பரிதாபம்!

சென்னைத் தெருக்களில் ஓட்டல் வாசல்களில், வெளிப்படையாகப் பிச்சை எடுப்பவர்கள் அரசாங்கப் புள்ளிவிவரத்திற்கு - சாதனைக்குச் சான்றாக இல்லையா?

வீடுகளில்; அலுவலகங்களில் போய், "நான், மதுரை மாவட்டம்; இராமநாதபுரம் மாவட்டம்; நெல்லை மாவட்டம்; வேலை தேடி வந்தேன்- கையில் கொண்டு வந்த சிறுதொகை செலவாகி விட்டது - எந்த வேலையும் கிடைக்கவில்லை - சாப்பிட்டு 2 நாள் ஆகிறது - ஒருவேளை உணவுக்கு ஏதாவது கொடுங்கள்!" என்று கண்ணீர் வடிக்கும் திடீர்ப்பிச்சைக்காரர்கள் அரசாங்கத்தின் சாதனைக்குக் கிடைத்த பரிசுதானோ? இப்படி வருவோர் தொகை கொஞ்சமா? அந்தோ பரிதாபம்! மவுண்ட்ரோடு, பாரீஸ் கார்னர் போன்ற போக்குவரத்து மிக்க இடத்தில் சற்று பொலிவான - இரக்கம் தோய்ந்த - முகபாவத்துடன், ஒருவன் நின்று கொண்டு போகிற வருகிற மக்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு, சிறிது நேரம் நின்றால் போதும் மேலே கூறிய திடீர்ப் பிச்சைக்காரர்களை டசன் கணக்கில் சந்திக்கலாம்!

இவை எதைக் காட்டுகின்றன? நாட்டின் அவலத்தையா? அமைச்சர் கூறும் வளத்தையா?

காரிலேயே போய், காரிலேயே வரும் அமைச்சர்களும், அவர்களைப் போன்றவர்களும், பெரிய கதர்ச் சட்டைகளும் நாம் கூறுகின்ற சோகநிலை நேரில் காண முடியாது- வாய்க்காதது!

அமைச்சர் தொடர்ந்து சொல்கிறார்:

அமெரிக்கா போன்ற வெளிநாடுகள் தங்களிடம் உற்பத்தியாகும் பொருட்களை உலகில் பல இடங்களில் விற்பனை செய்யச் சந்தைகள் வைத்து இருக்கின்றன, உள்நாட்டு தேவையும் அதிகம். எனவே, அவர்கள் தேவைக்குப் போக மீதியை, அயல் நாடுகளில் - குறிப்பாகச் சிறிய நாடுகளில் விற்கிறார்கள்.

ஒருநாட்டின் அளவு குறுகினால், அதன் பொருளாதார ஆற்றலும், உற்பத்தி அளவும் குன்றும். பிரிவினை மனப்பான்மை யுள்ளவர்கள், இதனை உணர வேண்டும்.

ஒரே இந்தியாவாக இருப்பதால் தான் கார்களை உற்பத்தி செய்யும் வசதிகளை இந்தியா பெற முடிந்தது

இதைப் போலவே எல்லாத் தொழிலின் வளர்ச்சியும் அதனதன் தன்மைக்கேற்ப இருக்கிறது.

தங்களிடம் உற்பத்தியாகக் கூடிய பொருட்களை, உள்நாட்டிலேயே செலவு செய்யக் கூடிய வசதி எந்த நாட்டிற்கு இருக்கிறதோ, அந்த நாடு தான் தொழில் துறையில் முன்னேற முடியும்.

அமைச்சர் இப்படிப் புளுகிக் கொண்டு வரும் போது அண்ணா குறுக்கிட்டு;-

"சிறிய நாடுகள் தனித்தியங்க முடியாது என்றால், இத்தாலியும், சுவிட்சர் லாந்தும். அவைகளின் உற்பத்திப் பொருள்களை உலகச் சந்தைகளில் விற்பனை செய்கின்றனவே அது எவ்வாறு முடிந்தது?"

என்று கடாவினார். அமைச்சர் இதற்குப்பதில் ஒன்றும்சொல்லாமல், கீரையையும் மயிரையும் குழப்புவது போல்;-

'குறுகிய காலத்தில் நாம் தொழில் துறையில் முன்னேற விரும்பினால், அயல் நாட்டின் உதவி பெற்றுத்தான் ஆகவேண்டும். அத்தகைய உதவி, பொருளாதாரத்திலும், எந்திர வளர்ச்சியிலும், சிறந்த பெரிய நாடுகளிடம் பெறுவதா? இவற்றில் குறைந்த சிறிய நாடுகளிடம் பெறுவதா?

வண்மை மிக்க நாடுகளில் உதவி பெற்றதாலேயே, நெய்வேலி-சேலத்து, நிலக்கரி-இரும்புத் தொழிற்சாலைகள் பெரிய பெரிய எந்திரங்கள் தோன்றின.

ஒருகாலத்தில் சிறிய நாடுகளாக இந்தியா பிரிந்து இருந்ததாலேயே அடிமைப்பட்டோம். மீண்டும் ஒன்று பட்டதால் இப்போது விடுதலை பெற்றிருக்கிறோம்.,

என்று உளறினாராம் அமைச்சர். உடனே கதர்ச்சட்டைகள் அத்தனையும் கைதட்டி ஆரவாரம் செய்து, அமைச்சரை உற்சாகப்படுத்தினவாம்!

இந்த ஆரவாரத்தைச் சிந்தனை செய்த போதுதான் மேலே கண்ட விவேக சிந்தாமணிப் பாடல் நினைவுக்கு வந்தது.

அமைச்சர் சுப்பிரமணியம் சொன்ன பெரிய நாட்டுத் தத்துவம் நமக்குப் புரிதல்லை! பல இடங்களில், கொடி தூக்கும் கூலிக்காங்கிரசுக் காரனிலிருந்து, கள்ளநோட்டுக் காங்கிரசுக் காரன் வரை, சொல்லிக் கொண்டிருக்கும் பொருளற்ற செக்குச் சத்தம்தான் அது! கிராமபோன் தட்டுகளாவது தேயத்தேய ஒலி மாறுவதோடு, சில சொற்களைச் சிதைத்து ஒழித்தும் விடுவதுண்டு. எண்ணெய் ஆட்டும் செக்குகளோ என்றைக்கும் 'ஊா' என்கிற ஒரே ஒலிதான்!

காங்கிரசார் சொல்லும் பெரிய நாட்டுத் தத்துவம் - ஏகஇந்தியா- அதனாலதான் சுதந்திரம்-என்பது உண்மையானால், சிறிய நாடுகள் அனைத்தும் அடிமை நாடுகளாகவா இருக்கின்றன?

உலகில் சூரிய சந்திர வெளிச்சம் பரவுகிற இடமெல்லாம் ஒரு கொடிக் கட்டி ஆண்ட பிரிட்டிஷார் தொகை எத்தனை? 3 கோடிக்கும் குறைவுதான் என்பதை இந்த மூடங்களுக்கு எத்தனை தடவைதான் சொல்வது! அந்தப் பிரிட்டிஷார் இன்றைக்கும், சுதந்திரத்தோடு, வளத்தோடு இருக்கிறார்கள் என்பதை இந்த சொரணையற்ற வடநாட்டுக் கையாட்களுக்கு அடிமைகளுக்கு எத்தனை தடவை தான் சொல்வது!

அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களிடம் உற்பத்தி ஆகும் பொருட்களை, வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கின்றன. என்கிறார் நமது கடன்கார அமைச்சர்! அவரைக் கேட்க விரும்புகிறோம்:- "உங்களுடைய ஏக இந்தியா எந்த நாட்டில் சந்தை வைத்திருக்கிறது?" என்று.

வடநாட்டில்தான் கனரக ஆலைகளிலிருந்து சோப்பு சீப்பு செய்யும் தொழில் வரை பெருகியிருக்கின்றன- கடந்த இரண்டு 5 ஆண்டுத் திட்டங்களின் பயனாக!

வடக்கே உற்பத்தியாகும் பண்டங்களுக்கு 'திராவிடம்' நல்ல மார்க்கட்டாக - சந்தையாக இருக்கிறது!

சான்று வேண்டுமா? திராவிடத்துக் கைத்தறித் தொழில் செத்துக் கொண்டே இருப்பதற்குக் காரணம் என்ன?

பிரிட்டன் ஆட்சி செய்தபோது "லங்காசயர்,மாஞ்செஷ்டர்,கிளாஸ்கோ முதலான பிரிட்டிஷ் துணிகள் இந்தியக் கைத்தறியைக் கொன்று விட்டன. ஆதலால் எல்லாரும் கையால் நூற்று நெய்து உடுத்துங்கள்! நாங்கள்தான் கைத்தறியை வாழ்விக்க வந்தவர்கள்" என்று, ஏறிய மேடைகளிலெல்லாம் கடைவாய் கிழியக் கத்தினான் காங்கிரசுக்காரன்.

இப்போது, லங்காஷயர் மாஞ்செஸ்டர் கிளாஸ்கோவாக, பம்பாயும் ஆமதாபாத்தும், சூரத்தும், இந்தூரும், இன்னம் என்ன சனியன் ஊரெல்லாமோ மாறி இருக்கின்றன! கதர்த்துணி ஏதோ மதச்சின்னம் போல 'புனிதம்' என்ற பேரால் அணியப் படுகிறது!

திராவிடத்துக் கைத்தறிக் காரன் கழிவுத் தொகையை நம்பி உயிர் வாழும்படி செய்யப் பட்டிருக்கிறான்!

இன்றையக் கைத்தறிகளுக்கு வடஇந்தியா ஆலை தவிர வேறு போட்டி உண்டா?

தென்னாடு வடஇந்தியா ஆலைத் துணிகளுக்கு சந்தையாக இருக்கிறது!

ஆலைத்துணி மட்டுமா? இன்றையத் திராவிடத்தில், ஆளும் பண்டங்களும், வாழும் பண்டங்களும், போக போக்கியப் பொருட்களும், கணக்கெடுத்தால் நூற்றுக்குத் தொண்ணூறு வடஇந்திய உற்பத்தி என்பதை மறுக்க முடியுமா?

அதுமட்டுமா? எந்தப் பொருளாவது கள்ளமார்க்கட் இல்லாமல் வாங்க முடியுமா?

இரும்பு எங்கே உற்பத்தி? விலை எவ்வளவு? ரேயான் எங்கே உற்பத்தி? விலை எவ்வளவு? பென்சிலின், ஃகைட்ரோ சல்பைட், வார்னீசுகள், பெயின்டுகள், செருப்புகள் உயர்ந்த தாட்கள் (பேப்பர்கள்), பேனாக்கள், கடிகாரங்கள், பென்சில்கள், இத்தியாதி இத்தியாதி...எல்லாம் வடக்கே! எல்லாம் கள்ளமார்க்கட்!

இவ்வாறு குறிப்பிடத்தக்க பொருளாதார வளம்தரத்தக்க தொழில்களையும் தொழிற்சாலைகளையும் வடக்கே அமைத்துக்கொண்டு தென்னாட்டைச் சந்தையாக்கி மீளாத வறுமைத் துயரத்தில் ஆழ்த்திச் சுரண்டுவதற்குத்தான் குடிசைத்தொழில் என்கிற பேரால் சதி செய்கிறார்கள்!

கோழிப்பண்ணை, கூடை முடைதல், கயிறு திரித்தல், அப்பளம் செய்தால் நூல் நூற்றல் முதலியவற்றை இங்கே கற்பிக்கிறார்கள்.

திராவிடத்தில் தொழில் வளம் பெருகவும், தேசிய வருமானம் உயரவும் எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை. வரி உயர்ந்திருக்கிறது! விலைவாசி உயர்ந்திருக்கிறது! காங்கிரசுக்காரர்களின் அகந்தையும, அக்கிரமமும் உயர்ந்துள்ளன!

திபேத் அகதிகள் பெற்ற பேறு கூட திராவிடம் பெறவில்லை!

கேட்க நாதியில்லை - கேட்டாலும், கேட்டவர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள்!

தொழில்வளம் பெருகி இருப்பதாகச் சென்னைக் கடன்கார மந்திரி தம் பட்டம் அடிக்கிறார்.

கடந்த ஆகஸ்டு 16-ம் நாள் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதில்கொடுத்த மத்திய மந்திரி கனம் இராஜ்பகதூர், தமது பதிலில்: —

இந்திய மாட்டுவண்டிகளுக்கு அமெரிக்காவில் தயாராகும் சக்கரங்கள் ஏற்றவையாக இருக்குமா என்று பரிசோதித்து 10 000 மாட்டு வண்டிச் சக்கரங்களை இறக்குமதி செய்ய உத்தேசித்திருப்பதாகச் சொல்கிறார்!

பரம்பரையாகத்தச்சுவேலை செய்யும் தென்னாட்டுத் தச்சர்கள் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். மத்திய மந்திரியாக வீற்றிருக்கும் அறிவுக்கொழுந்துகள் அமெரிக்காவிலிருந்து மாட்டுவண்டிச் சக்கரங்களை இறக்குமதி செய்கிறார்கள்!

இப்படிக் காலமெல்லாம் தென்னாட்டைத் தேய்க்கத்தான் ஏக இந்தியாவா?

திராவிடன் திசைக்குக் கொஞ்சம் பேராகப் போய்ச்செத்து மடியத்தான் ஏகஇந்தியாவா?

வடநாட்டுச் சுரண்டலுக்குத் திரையாகத்தான் சென்னை மந்திரிகள் இருக்கிறார்கள் என்பதில் தவறென்ன?

சிறிய நாடுகளில் முன்னேற்றம் இருக்காது என்று பச்சைப்பொய் கூறும் அமைச்சரே! உம்மால் இதனைப் புள்ளி விவரத்தோடு மெய்ப்பிக்க முடியுமா?

இந்தியா ஒன்றுபட்டதால்தான் சுதந்திரம் பெற்றுச் சுகமாக இருக்கிறோம் என்று அமைச்சர் அறிவித்தவுடன் கைதட்டிய கருத்துக் குருடர்களே! இந்தியா சுதந்திரம் பெறுவதற்குமுன் தமிழன் எவனாவது கள்ளத்தோணியில் போய்ச் செத்தது உண்டா?

சுதந்தரம் பெற்ற 14 ஆண்டுக்குள் கள்ளத்தோணியில் போய் கடலில் மூழ்கியவர்களில் வடநாட்டான் ஒருவன் உண்டா?

மானமும் அறிவும் வேண்டாம் என்று கைதட்டினீர்களா?

அருப்புக்கோட்டை

எம். எஸ். இராமசாமி.

மல்லிகைப் பந்தல்

நாரா நாச்சியப்பன்.

22. ஜமீந்தார் சொன்ன பழைய கதை.

குணவதியம்மாளும் சுந்தரேசனும் வந்திறங்கியதைக் கண்ட கந்தசாமி வாத்தியார் முதலியவர்களின் மனத்தில், அவர்கள்தான் ஜமீந்தார் மாளிகையை விலைக்கு வாங்கப் போகிறார்களோ என்ற சந்தேகம் தோன்றியது. குணவதியம்மாள் ஏழையைப்போல் வாழ்ந்தாலும், தன் கணவர் கயிலாயத்தைக் கொடுமைப்படுத்தி ஏராளமான பணம் சேர்த்து வைத்திருந்தாள் என்று அப்போதே ஊரில் பேசிக்கொண்டார்கள். ஆனால், அவள் எவ்வளவுதான் பணம் சேர்த்து வைத்திருந்தாலும், அதையெல்லாம் விட்டுவைக்கக்கூடியவனல்ல அவள் மகன் சுந்தரேசன் என்பதும் ஊரறிந்த விஷயம். அவன் கண்ணுக்குத் தட்டுப்பட்ட பொருள்கள் மட்டுமல்லாமல், அவன் சந்தேகத்திற்கிலக்கான பொருள்களும் வீட்டில் தங்கியது கிடையாது. இருந்தாலும் குணவதியம்மாள் எப்படியோ அவனுக்குத் தெரியாமல் பொருள் சேர்த்து வைத்திருக்கலாம் என்றுதான் அப்போது ஜமீந்தார் மாளிகையை விலைக்கு வாங்கிவிட்டதாகக் கருதப்படுகிற அந்த மர்மப் பேர்வழிகள் அவர்களாயிருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் அங்கிருந்தவர்கள் உள்ளத்திலே ஏற்பட்டது ஒருகணம். ஆனால், மறுகணமே அந்தச் சந்தேகம் போய்விட்டது. அவர்கள் வந்த அவசரத்தையும் கடுகடுப்பையும் குணவதியம்மாளின் முகத்தில் தோன்றிய சிடுசிடுப்பையும் நோக்கியபோது அவர்கள் மாளிகையை விலைக்கு வாங்கி அதில் வாழ வந்தவர்களாகத் தோன்றவில்லை; அங்கு யாருடனோ சண்டை போட வந்தது போல் தோன்றியது.

சுந்தரேசனைவிட்டு இறங்கி வந்தவுடன் கந்தசாமி வாத்தியார், மரகத அம்மாள், தங்கம் ஆகியோரைப் பார்த்து நலம் விசாரித்தான். குணவதி அம்மாள் அவர்களுடன் ஒருவார்த்தைக் கூடப் பேசவில்லை மாறாக அவர்களையெல்லாம் காணவே பிடிக்காதவள் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டும் வேறுபுறம் திருப்பிக் கொண்டும் இருந்தாள்.

வாசலில் நின்ற எல்லோரையும் கூடத்தில் வந்து அமரும்படியாக ஒருவர் வந்து வரவேற்றார். அவர்தான் அந்த மாளிகையின் காரியக்காரர் என்று நினைக்க வேண்டியிருந்தது.

எல்லோரும் கூடத்தில் விரித்திருந்த பெரிய சமுக்காளங்களில் ஒன்றில் போய் உட்கார்ந்தார்கள். அந்தக் கூடம் முழுவதும் சமுக்காளங்கள் விரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் பரப்பைப் பார்த்த போதே அன்று சுமார் நூறு நூற்றைம்பது பேராவது வருகைக்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருந்தது.

நேரம் செல்லச் செல்ல உள்ளூர் வாசிகளும் வெளியூர் வாசிகளுமான செல்வந்தர்கள், ஒவ்வொருவராகவும் குடும்பங் குடும்பமாகவும் அங்கு வந்து சேர்ந்தார்கள். பதினொரு மணிக்கெல்லாம் அந்தக் கூடம் நிறைய ஆட்கள் கூடிவிட்டார்கள். அத்தனைபேரும் செல்வந்தர்கள் அல்லது வியாபாரிகளாக இருந்தார்கள் ஜமீந்தாரையும். வீடு வாங்கப்போகிறவரையும் தான் இன்னும் காணவில்லை.

சரியாக மணி பனிரெண்டடித்ததும் அதே காரியக் காரர் வந்து எல்லோரையும் சாப்பாட்டுக் கூடத்திற்கு வரும்படி அழைத்தார். எல்லாம் அன்று விசித்திரமாக நடந்தது. விருந்துவைப்பவர் ஜமீந்தாரா அல்லது மாளிகையை விலைக்கு வாங்கியவர்தானா என்று யாருக்கும் தெரியவில்லை. யாரும் இல்லாமலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

காரியக்காரர் அழைத்தவுடன் எல்லோரும் சாப்பாட்டுக் கூடம் நோக்கிச் சென்றார்கள். ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும் அங்கே தனித்தனியே பந்தி பிரித்து இலை போடப் பட்டிருந்தது சாப்பாடு மிக உயர்ந்த ரகமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. ஜமீந்தார் வீட்டுத் தகுதிக்கேற்றபடிபத்துவகைக் கறிகளுடன், பாயசம் சூப்பு அப்பளம் வடை ஆகியவற்றுடன் பாராட்டிப் பாராட்டிச் சாப்பிடும் படியான சுவையுடன் இருந்தது அன்றையச் சாப்பாடு.

சாப்பாடு முடிந்து எல்லோரும் வரவேற்புக் கூடத்திற்குத் திரும்பி வந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கும் போது, மாளிகை வாசலில் அழகான சிறிய பேபிசலூன் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஜமீந்தாரும் அண்ணாமலைப் பண்டிதரும் இறங்கிக் கூடத்திற்கு வந்தார்கள், அந்தக் காரைத் தொடர்ந்து வந்த ஒரு வானிலிருந்து, ஒரு வழக்கறிஞரும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கி வந்தார்கள். அவர்களும் ஜமீந்தாரையும் பண்டிதரையும் பின் தொடர்ந்து கூடத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் கூடத்திற்குள் நுழைந்தவுடனேயே, 'இதோ வந்துவிட்டார்! ஜமீந்தார் ஐயா வந்துவிட்டார்!'' என்று அங்கு இருந்தவர்கள் குரல் எழுப்பினார்கள். எல்லோரும் எழுந்து நின்று வாசற் பக்கம் தலை திருப்பிப் பார்த்தார்கள்.

ஜமீந்தாரும், பண்டிதரும் வழக்கறிஞரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கூடத்தின் மத்தியில் விரித்திருந்த இரத்தினச்சமுக்காளத்தில் போய் அமர்ந்தார்கள். அவர்கள் அமர்ந்தவுடன் வந்திருந்த விருந்தினர்களும் ஆங்காங்கே அமர்ந்தார்கள்.

சிறிதுநேரம் ஜமீந்தாரும் அண்ணாமலைப் பண்டிதரும் தங்களுக்குள்ளே ஏதேதோ குசுகுசு என்று பேசிக்கொண்டார்கள். பிறகு அவர்கள்கூட வந்திருந்த வழக்கறிஞரை நோக்கியவுடன் அவர் ''ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டார்,

''ஆரம்பிக்கலாமா?'' என்று அவர் கேட்ட வார்த்தை கூடியிருந்த அத்தனை பேரின் காதுகளிலும் ஒலித்தது.

எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. மாளிகையை வாங்குபவர் யாரும் இல்லாமலே இவர்கள் ஆரம்பிக்கப் போவது எதை என்று யாருக்கும் புரியவில்லை. இந்த மர்ம நாடகத்தின் அந்தரங்கமெல்லாம் இன்னும் சிறிது நேரத்தில் அம்பலமாகாமலா போய்விடும்? என்று எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

ஜமீந்தார் தலையை அசைத்ததன் மூலம், தன் சம்மதத்தைத் தெரிவித்தவுடன், வழக்கறிஞர் ''தங்கம்! தங்கம்!'' என்று கூப்பிட்டார். அவர் தன்னை யழைப்பதன் காரணம் புரியாமல் தங்கம் திகைத்துக்கொண்டிருந்தாள். கந்தசாமி வாத்தியாரும், மரகத அம்மாளும்கூட ஏன் தங்கள் மகள் அழைக்கப்படுகிறாள் என்பது புரியாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

தங்கம் உடனடியாக வராமல் போகவே, ''நெய்யூர் கந்தசாமி வாத்தியார் மகள் தங்கம் இருந்தால், கொஞ்சம் இங்கே வா அம்மா!'' என்று வழக்கறிஞர் அழைத்தார். ஏன் எதற்கென்று புரியாமலே தங்கம்,ராதாவின் கையைப் பிடித்துக்கொண்டு ஜமீந்தார் முதலியவர்கள் இருந்த இடத்திற்கு வந்தாள். அவள் வருவதைக் கண்ட வழக்கறிஞர் ''கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும்கூட இங்கு வந்தால் நல்லது' என்று கூறினார். அவர்களும் தங்கத்தைத் தொடர்ந்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து குணவதியம்மாளும் சுந்தரேசனும் வந்தார்கள், அழைக்காமலே!

எல்லோரும் அருகில் வந்து சேர்ந்ததும் வழக்கறிஞர் எழுந்து நின்றுகொண்டு. ''பெருங்குடி மக்களே, ஜமீந்தார் கருணாகரர் அவர்கள் இந்த மாளிகையை விற்கப்போவதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இப்போது அதன் கிரயப்பத்திரத்தை எழுதி முடிப்பதற்கே நாம் எல்லோரும் கூடியிருக்கிறோம் இந்த மாளிகையை இப்போது, நெய்யூர் கந்தசாமி வாத்தியார் மகளாகிய இந்தத் தங்கம்மாளுக்குக் கிரயம் செய்து கொடுக்கப் போகிறோம்'' என்று கூறிய வழக்கறிஞர் தங்கத்தின் பக்கம் தன் வலக்கை ஆள்காட்டி விரலைக் காட்டினார். அந்தக்கூட முழுவதும் வியப்பினால் வாயடைத்துப் போயிருந்தது. ஏழைக் கந்தசாமி வாத்தியாரிடம் இந்த மாளிகையை வாங்க ஏது பணம்? தங்கத்தின் திருமணத்திற்கே கையில் காசில்லாமல் இதுவரை திண்டாடிக் கொண்டிருந்த அவருக்கு இந்த மாளிகையை வாங்கக்கூடிய பணம் எங்கிருந்து கிடைத்தது என்று பற்பலவாறு எல்லோரும் யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

இதெல்லாம் ஜமீந்தார் அல்ல அவரும் அண்ணாமலைப் பண்டிதரும் சேர்ந்து நடத்துகின்ற விளையாட்டு என்று எண்ணிப் பேசாமல் இருந்தாள் தங்கம்.

''ஜமீந்தாரையா, இது என்ன விளையாட்டு? எங்களிடம் இந்த மாளிகையை வாங்க ஏதுபணம்?'' என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

''இதோ பாருங்கள்! என்று சொல்லி ஒரு சீட்டை எடுத்து நீட்டினார் ஜமீந்தார் கருணாகரர். அது ஒரு டிராப்டு (உண்டியல்) சீட்டுப் போலத் தெரிந்தது. கந்தசாமி வாத்தியார் அதை வாங்கிப் பார்த்தார். அரசாங்க பாங்கியின் அந்த உண்டியல் சீட்டில், தங்கம் பெயருக்கு ஐம்பது லட்ச ரூபாய் கொடுக்கச் சொல்லி எழுதியிருந்தது. கந்தசாமி வாத்தியாரால் தன் கண்களையே நம்பமுடியவில்லை.

அதற்குள் ஜமீந்தார் எழுந்து நின்றார். அவர் ஏதோ பேசப் போகிறார் என்று அறிந்த வழக்கறிஞர் கீழே அமர்ந்து விட்டார். விருந்தினர்கள், வியப்புணர்ச்சியோடு கூடிய கண்களை நிமிர்த்தி. ஆவலுடன் ஜமீந்தாரையே நோக்கினார்கள்.

'பெருங்குடி மக்களே, பெரியோர்களே, தாய்மார்களே நீங்கள் எல்லோரும் என்னவோ ஏதோவென்று நினைத்துக் கொண்டிருக்கிற சந்தேகங்களையெல்லாம் இப்போது நான் போக்கி விடுகிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால், நான் பள்ளிக் கூடத்திலே படித்துக்கொண்டிருந்த போது எனக்கு உயிர்த்தோழன் ஒருவன் இருந்தான். அவன் பக்கத்திலிருக்கும் சித்திர நல்லூரைச் சேர்ந்தவன். அவனும் நானும் இணைபிரியாத தோழர்களாய் இருந்தோம். அவன் எப்போதும் என்கூடவே யிருந்தான். நான் அவன் வீட்டிற்குப் போவதும். அவன் என் வீட்டிற்கு வருவதும் இப்படியாக இரண்டு பேரும் பிரியாமலே வாழ்ந்து வந்தோம்.

அந்த நண்பன் எங்கள் அளவு செல்வம் பொருந்திய குடியில் பிறந்தவனல்ல. ஆகவே என் தந்தையார் அவர்கள் என்னை அவன் வீட்டிற்குப் போகக்கூடாதென்று சொல்லிவிட்டார்கள். ஜமீந்தார் மகனான நான் சாதாரண மனிதருடைய வீட்டிற்குப் போவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால், வேண்டுமானால் அவனை எங்கள் மாளிகையிலேயே வந்திருக்கும்படி என் தந்தைகூறியதைக்கேட்ட அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால், அவன் எனக்காகத் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, எங்கள் மாளிகையிலேயே வந்து தங்கினான்.

ஒருநாள் நான் உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் கிடந்தேன். அப்போது அந்த நண்பன்,என் தந்தையாருடன்கூட இருந்து உணவுண்ண நேர்ந்தது என் தந்தையார் அவனை நோக்கி, ''நீயோ எங்கள் அந்தஸ்துக்கு இணையானவன் அல்ல. எங்கள் வீட்டிலே ஒருமுறை சாப்பிட்டால், உங்கள் வீட்டிலே ஒருமுறை எங்களுக்கு விருந்து வைக்க வேண்டும். ஆனால், அதற்குத் தகுதியான செல்வம் உன் வீட்டில் கிடையாது. அப்படியிருக்கும்போது நீ எங்கள் வீட்டில் சாப்பிடுவது உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கேட்டார் உடனே என் நண்பனுக்குக் கோபம் வந்து, ''என் தந்தையோ, பட்டனாரோ எனக்கு இவ்வளவு செல்வம் வைத்துவிட்டுப் போகவில்லை என்பது உண்மைதான். ஆனால், அதற்காக நான் கவலையோ, தளர்ச்சியோ அடையவில்லை. இந்த நாட்டிலே உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாத நிலையிலே எத்தனையோ பேர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டுப் போயிருக்கும் நிலையில், என் தந்தையார் பாட்டனார் முதலியவர்கள் என்னை இவற்றிற்கெல்லாம் அலையாமல் ஓரளவு செல்வம் வைத்துவிட்டுப் போனதற்காக அவர்களை மனமாரப் போற்றுகிறேன். ஆனால், என் காலத்திற்குள் எப்படியும் உங்களுடைய மாளிகையையே நான் விலைக்கு வாங்கி விடுகிறேனா இல்லையா என்று பாருங்கள். உங்கள் காலத்திற்குள் இல்லாவிட்டாலும், என் காலத்திற்குள் நான் இதை விலைக்கு வாங்கிவிடுவேன்.' என்று சபதம் செய்தான்.

அதன் பிறகு அவன் என்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் போய் விட்டான். ஆனால், அவனில்லாததால் எனக்கு உடல் நலம் மேலும் கெட்டு நான் ஆபத்தான நிலையை எய்தியது கண்ட என் தந்தை அவன் வீட்டிற்குச் சென்று, தான் விளையாட்டாகக் கேட்ட விஷயத்தை மறந்து, பெரிய மனது பண்ணி வந்துஎன்னைப் பிழைக்க வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்படி அவன் திரும்பி வந்து என்னை மகிழ்வித்து, குணமாகும் வரை கூட இருந்து என் பெற்றோரையும் மகிழ்வித்தான்.

ஆனால், பாவம்! அவனுடைய இல்லற வாழ்க்கை சுகப்படவில்லை பெரிய இலட்சியவாதியான என் நண்பனுக்கு அவன் பெற்றோர்கள், முற்றிலும் பொருத்தமான நற்குண நற்செயல்கள் பொருந்திய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். அவளோ. பொறுமையும் அடக்கமும் அன்பும் அறிவும் ஒருங்கே படைத்தவள். ஆனால். அழகு மட்டும் இல்லாதவள். சுத்தக்கருப்பு. அதனால். என் நண்பன் மிகவும் அழகுடைய பெண்ணொருத்தியைத்தானே தேடிப்பிடித்து மூத்தவளின் ஒப்புதலோடு இரண்டாவது திருமணம் செய்து கொண்டான், அழகு ஒன்றையே முக்கியமாகக் கருதி அவளை மணந்து கொண்ட என் நண்பன் கடைசியில் அவளுடைய குரூர குணத்தின் கொடுமை தாங்க மாட்டாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டான். அவன் எங்கோ சாமியாராய்ப் போய் விட்டதாகப் பேசிக் கொண்டார்கள் அப்போது எனக்கும் மணமாகி விட்டபடியால், நான் என் நண்பனின் பிரிவினால் அவ்வளவாகத் துன்பப் படவில்லை.

இருபது ஆண்டுகளாக என் நண்பனைப் பற்றிய செய்தி எதுவும் தெரியாமல் இருந்தது. ஆனால், ஓராண்டுக்கு முன்னால் திடீரென்று ஒரு நாள் சென்னையில் உள்ள என் வீட்டிற்கு வந்து அந்த நண்பன், ''நான் உன் தந்தையிடம் சபதம் செய்தபடி இப்போது உங்கள் மாளிகையை விலைக்கு வாங்கப் போகிறேன்'' என்றான். என்னால் நம்பவே முடியவில்லை.,,

ஜமீந்தார் இந்த இடத்தில் சிறிது நிறுத்திவிட்டு, வேலைக்காரன் ஒருவனைத் தண்ணீர் கொண்டு வரும்படி சொல்லிக் குடித்தார். ஜமீந்தார் கூறிய இந்தக் கதையை அக்கரையோடு கவனித்துக் கொண்டுவந்த விருந்தினர்கள், மேற்கொண்டு அவர் என்ன சொல்லப் போகிறார்? அவருடைய நண்பர் யார்? அந்த நண்பருக்கும் தங்கத்திற்கும் என்ன தொடர்பாயிருக்கும்? என்றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

நீர் குடித்து முடிந்தவுடன் ஜமீந்தார் கருணாகரர் மேலும் தன் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார்.

அவர் இன்னாரைப் பற்றித்தான் சொல்லுகிறார் என்று கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் புரிந்து கொண்டார்கள் இருந்தாலும், தங்கள் வியப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தி விடாமல், முழுவதும் சொல்லி முடிக்கட்டும் என்று காத்துக்கொண்டிருந்தார்கள். ஜமீந்தாரின் கதையைப் புரிந்துகொண்டவர்கள் அங்கு இன்னும் இரண்டு பேர் இருந்தார்கள்.

அவர்களும் கதை முழுவதும் முடியட்டும் என்றுதான் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரென்றால், சுந்தரேசனும், அவனுடைய தாயார் குணவதியம்மாளும்தான்.

ஜமீந்தார் மீண்டும் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தபோது அந்த வரவேற்புக்கூடம் முழுவதும் ஒரே அமைதியாக இருந்ததால், அவருடைய குரல் கணீர் என்று ஒலித்தது.

— தொடரும் —

நியாயத்திற்குப் போராடும் வீரர்.

டாக்டர் சிதம்பரநாதனுக்கு

டாக்டர் இலட்சுமணசாமியின் பாராட்டு.

சென்னை தென்னிந்தியக் கலைக் கழகத்தின் சார்பில் 16-9-60 வெள்ளி மாலை 7-30 மணிக்குச் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள். மாஸ்கோ கீழ்த்திசை மொழி மாநாட்டிற்குச் சென்று திரும்பியதற்காக சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சர். ஏ. லட்சுமணசாமி அவர்கள் தலைமையில் சென்னை ஓட்டல் தாசப்பிரகாசாவில் ஒரு வரவேற்பு விருந்து அளிக்கப்பட்டது.

டாக்டர் ஏ லட்சுமணசாமி அவர்கள் தலைமை உரையில் கூறியதாவது:

''வெளி நாடுகளுக்குச் செல்லும் தூதுக் குழுக்களில் தென்னாட்டவர்க்கு அதிலும் உரிய அறிஞர்களுக்கு இடம் கிடைப்பது என்பது ஓர் அரிய நிகழ்ச்சி, இந்நிலையில் மாசுகோ கீழ்த் திசை மொழி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு உரிய இந்திய மொழி அறிஞர் குழுவில் தமிழகப் பெருமகன் ஒருவருக்கு இடம் கிடைத்தமை மகிழ்ச்சிக்கு உரிய செய்தியாகும் மாசுகோ மக்கள் இவரால் பயனடைந்திருப்பார்கள்; தமிழ்நாடும இவரால் பயனடைந்து இருக்கிறது. இவரைச் சென்ற 20 ஆண்டுகளாக அறிவேன் அவர் எங்கே பணியாற்றினாலும் சிறப்பிடத்தை எய்துவார் என்பது உறுதி. கல்வித் துறையில் பல காலமாகத் தொடர்பு கொண்டு வந்திருக்கிறார், சென்னை மேல் சபையில் என்னுடைய தலைமையில் உள்ள சிறு குழுவில் இவரும் ஓர் உறுப்பினராய் இருந்து வருகிறார். சபையில் எல்லாத் தரப்பினரும் (அரசுத் தரப்பினர் உட்பட) மிகுந்த மரியாதையுடன் இவரது உரையைச் செவி மடுக்கிறார்கள், நியாயமான காரணங்கள் எதுவாய் இருப்பினும், அவற்றை ஆண்மையுடன் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்ற சிறந்த வீரர். இவர் மாஸ்கோவில் பெற்ற அனுபவம்-அதன் பயன் ஆகியவற்றால் தமிழ்நாடு மட்டுமேயன்றி தென்னிந்தியப் பண்பாடும் புதுமெருகும் புதிய ஒளியையும் பெற்றுத் திகழுமென நம்புகிறேன்!

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எம். இரத்தினசாமி, டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் தோற்றத்தால் இளையவர், ஆனால் முதிர்ந்த அறிவும், சிறந்த ஆற்றலும், நெடிய அனுபவமும் பெற்றவர். மாஸ்கோ மாநாடு இவர் மூலமாக திராவிட நாகரிகத்தை முதன் முதலாக அறிந்திருக்கும் என்பது திண்ணம் என நம்புகிறேன்.

அதனை அடுத்து திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள், ''டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தேனூறும் செந்தமிழால் தித்திக்கப் பேசுங்கால் அதனை வியக்காத, போற்றாத தமிழ் மக்கள் இரார், தமிழ் அறிந்தார் அனைவரும் செந்தமிழ்க் காவலரை நன்கு அறிவர்'' எனப் பலபட அவரது சிறப்புகளைக் கூறினார். அதன் பிறகு பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் செந்தமிழ்க் காவலரின் மாணவப் பருவத்தையும் ஆசிரியர் பருவத்தையும், பேராசிரியர் பருவத்தையும் விளக்கி உழைப்பால், உண்மை அறிவால், ஆற்றலால், ஆராய்ச்சித் திறனால் அவர்கள் உயர்ந்தது இன்று பழுத்த கனியாய் விளங்கும் வெற்றியைச் சுவையோடு விளக்கி அதுமட்டும் அல்லாமல் அவரது இல்லத் துணைவி பெரியநாயகி அம்மையாரும் சிறந்த அறிவும், நூல்கள் எழுதி அளித்த திறமையும் உடையவர் என்றும், சிறந்த விருந்தோம்பல் குணம் படைத்தவர்கள் என்றும் பாராட்டினார்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டு உரைகளுக்கெல்லாம் டாக்டர் அ. சிதம்பரநாதன் தக்க முறையில் பதில் அளித்தார். ''எனக்கு வரவேற்பு அளிக்கும் முகத்தான் இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் திரு. டாக்டர் முதலியார் அவர்கள் அளித்த வாழ்த்தினை அன்புடன் ஏற்று, அதனை என் வாழ்நாள் முழுவதும் போற்றிக் காப்பேன். தமிழின் பெருமையைத் திருக்குறளின் பெருமையை எடுத்து இயம்ப மாஸ்கோ மாநாடு எனக்கு நல்வாய்ப்பு அளித்தது. அவ்வாய்ப்புக்கு இந்திய அரசியலார் பாதித் தொகையையும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பாதித் தொகையும் அளித்தனர். சென்னைப் பல்கலைக் கழகம் என்னை அனுப்பி வைக்க, அதற்கு முக்கியக் காரணமாய் இருந்த டாக்டர் முதலியார் அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன். என்னைப் பாராட்டி வாழ்த்திய அனைவரின் வாழ்த்தும் இதுபோன்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்ற எனக்கு மேலும் ஊக்கமளிக்கும்.

தென்னிந்தியக் கலைக் கழகத்தின் சார்பாக, டாக்டர் மா. இராசமாணிக்கனார் நன்றி தெரிவிக்க விழா இனிது முடிவுற்றது.



டாக்டர் சிதம்பரநாதனார் மாஸ்கோ சென்று திரும்பியபோது மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எடுத்த படம்

(படம்:— நக்கீரர் கழகம்)

செய்திச் சுழல்

இலங்கை யரசாங்கச் செலவுக்குத் தமிழர் பணம்

இலங்கை யரசாங்கம் தனது புதிய பட்ஜட்டில் ஏற்பட்ட பற்றுக்குறையைச் சரி செய்வதற்காக ஒரு புது வழி கண்டுபிடித்திருக்கிறது. திருமதி சிரிமா பண்டார நாயகாவின் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருப்பவர் பெலிக்ஸ் டயாஸ் பண்டார நாயகா என்பவர். இவர் தமது பட்ஜட்டைச் சமர்ப்பித்து அதில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையை நிவர்த்திப்பதற்குச் சில வழிகளையும் காட்டியிருக்கிறார். அதிலே ஒன்றுதான், இலங்கைக்குப் பிழைக்கப்போன தமிழர்களின் அடிமடியிலே கை வைப்பதாக உள்ளது.

இலங்கையிலே போய் அந்நியராகத் தங்குகின்ற அயல்நாட்டினர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு ரூ 400 தலைவரி கட்டவேண்டுமாம். மூன்று மாதத்திற்குமேல் தங்குகின்றவர்கள் இந்த வரி கட்டாமல் தப்ப முடியாது.

இந்த விஷயத்தில் இலங்கை, பர்மாவை மிஞ்சிவிட்டது. பர்மாவிலேதான், அன்னியர்கள் பதிவுக் கட்டணம் என்ற பெயரில், ஆண்டு ஒன்றுக்கு ரூ 100 கட்ட வேண்டுமென்ற சட்டம் ஏற்பட்டது. அதைப் பின்பற்றி நடக்கின்ற இலங்கை பர்மாவைப்போல் நான்கு மடங்கு தலைவரி போட்டிருக்கிறது இனி இலங்கையைப் பார்த்து, பர்மா தன் வரி விதிப்பைக் கூட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கை அரசாங்கத்தை நடத்தப் பணம் இல்லையென்றால் அதற்குத் தமிழர்களின் மடியைப் பிடுங்கித்தான் நடத்த வேண்டுமா ? இந்தச் செயல், இலங்கையில் ஆளுகின்ற வர்க்கத்தவரின் வெறித்தனத்தைத்தான் காட்டுகிறது.

இலங்கையில் அன்னியர்களாக வாழுபவர்கள் - இந்தியர்கள் என்ற பெயரில் உலவுகின்ற தமிழர்கள். இவர்கள் சுமார் 35,000 பேர் இருக்கிறார்கள் இந்த வரி விதிப்பின்மூலம், தமிழர்கள் ஓடியாடி உழைத்த பணம் மொத்தமாக ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி வீதம் இலங்கை யரசாங்கத்தின் நிதியில் போய்ச் சேரப்போகிறது

தமிழர்கள், பிறந்த மண்ணில் பிழைக்க வழியில்லாமல் வேறு நாடுகளுக்கு ஓடுவதும், அந்த நாடுகளிலே இல்லாத ஆக்கினைகள் எல்லாம் செய்து இவர்களைத் துரத்துவதும் இன்றைய நித்திய நடப்பாகி விட்டது. வெள்ளைக்காரன் காலத்திலேதான் வேறு விதியற்று கதியற்று கங்காணிகளின் ஆசைவார்த்தைகளால் மோசம் போய் கூலிகளாய் அடிமைகளாய்க் கப்பலேறிக் கடல் தாண்டி நாதியற்ற நடைப்பிணங்களைப்போல் வாழ்க்கை நடத்தினார்கள் இன்று ஏதோ சுதந்திரம் இங்கே வந்துவிட்டதென்று சொல்கிறார்களே, காமராசரும், சுப்பிரமணியமும். அந்தச் சுதந்திரம் வந்த பிறகாவது தமிழன் இந்த நாட்டிலே-தான் பிறந்த நாட்டிலேயேவாழ்வதற்குவழியில்லாமல் அயல்நாடு போவதால் தானே இந்த அவதியெல்லாம் ஏற்படுகிறது.

'தமிழர்கள்' என்ற பெயரைக் கேட்டவுடனேயே முகத்தைச் சுளிக்கின்ற நேருபிரான் அவர்கள் இதைப் பற்றி என்ன சொல்லப்போகிறார்-என்ன செய்யப்போகிறார் என்று நாம் சிந்திக்கவே தேவையில்லை. வடநாட்டான் வாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மையுள்ள அவர் இது விஷயமாக இலங்கை அரசாங்கத்துடன் ஏதேனும் பேச்சு வார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்ப்பது வீண் கனவுதான்!

மலாயாப் பாராளுமன்றத்தில் தமிழர்களுக்குக் கொடுமை !

மலாயாவில் வாழும் குடியுரிமை பெற்றவர்களைக் கொடுமைப்படுத்தக் கூடிய மசோதா ஒன்றை மலாயாப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இம்மசோதாவின்படி, மலாயாக் குடியுரிமை பெற்றவர்கள் தங்கள் மக்களைத் தங்களோடு வைத்துக் கொள்ளும் உரிமை மறுக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த மசோதாவில், ஆறுவயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றோர் வரவழைத்துக் கொள்ள அனுமதி வழங்கக் கூடாது என்று ஒரு நிபந்தனை குறிக்கப்பட்டுள்ளது.

பதினெட்டுவயதுக் குட்பட்ட பிள்ளைகளைப் பெற்றோர் தங்களிடம் வரவழைத்துக் கொள்ள அனுமதி வழங்க வேண்டுமென்று மலாயன் இந்தியர் காங்கிரஸ் கோரிக்கை விட்டிருக்கிறது. ஆனால், இந்த நியாயமான கோரிக்கையை மலாயப் பிரதமர் துங்குஅபதுல்ரகிமான் ஏற்க மறுத்துவிட்டார். பாராளுமன்றத்தில் மலாயன் இந்தியக் காங்கிரசின் பிரதிநிதிகளாக உள்ள வி. சம்பந்தம், வி. மாணிக்கவாசகம் என்ற இருவரும் இக்கோரிக்கை பற்றி வாய் திறக்க வில்லை என்ற செய்தியறிய நமக்கு மிகவும் வேதனை யாயிருக்கிறது.

பெற்றோரையும், பிள்ளைகளையும் பிரித்து வைக்கக் கூடிய இந்தப் பெருங்கொடுமையை நாம் எங்கு போய்ச சொல்வது? நமக்கென ஓர் அரசு இருந்தால் அல்லவா நம் குறைகளைய அக்கறையோடு முன் வரும்?

இலங்கைக் கடற்கரை யோரங்களில் 2000 படை வீரர்கள்

கள்ளத் தோணியில் வந்திறங்கும் தமிழர்களைக் கண்டு பிடித்துத் தண்டித்து அனுப்புவதற்காக இலங்கையைச் சுற்றிலும் உள்ள கடற்கரை யோரங்களில். இலங்கை இராணுவத் [illegible] 2000 படை வீரர்களை காவல் நிறுத்தப் படப்போகிறார்கள். இவர்கள், கடற்கரை யோரத்தில் ஆங்காங்கே உள்ள காட்டுப் பிரதேசங்களில் தங்கியிருந்து கடற்கரை முழுவதையும் கண்காணித்துக் காவல் புரிவார்களாம். இது தவிர, காங்கேசன் துறை என்னுமிடத்தில் இலங்கை அரசினர் விமானப் படை நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டு அதுவும் காவல் புரியுமாம். இந்தக் காங்கேசன் துறைக்கு இரண்டு மைல் தூரத்தில் கடற்கரையில் ஒரு வாரத்திற்கு முன் ஒரு பெண்மணியுட்பட 38 பேர் ஒருபடகில் வந்திறங்கிய போது இலங்கை கடற்படையினர் அவர்களைப் பிடித்து விட்டார்களாம். இந்தச் செய்திகளையெல்லாம் கேட்கும்போது எவ்வளவு வேதனையாயிருக்கிறது! இங்கு நடப்பது மக்கள் நலத்திலே யக்கறையுள்ள அரசாங்கமாக இருந்தால், இந்தமாதிரி மானக்கேடானநடவடிக்கைகள் ஏற்படும் வரை பார்த்துக் கொண்டா இருக்கும். என்றுமே சொந்த அரசு தனியரசுதான், மாற்றார் அரசு வேறுதான்!

விருது வழங்குகிறார்களாம் விருது !

மனிதாபிமானமுள்ள சிறப்புமிக்க வீரச் செயல்கள் புரிபவர்களுக்குப் புதிய விருதுகள் வழங்குவதென்று இந்திய அரசினர் முடிவு செய்துள்ளனராம்.

இந்த விருது மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்படுமாம். முதல் வகுப்பு விருது, மீட்பவரின் உயிருக்கு மிகப் பெரிய ஆபத்து நேரக்கூடிய சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க வீரச் செயல் புரிபவருக்கும், இரண்டாவது வகுப்பு விருது மீட்பவரின உயிருக்கு பெரிய ஆபத்து நேரக்கூடிய சூழ்நிலைகளில், தைரியத்துடனும் உடனடியாகவும் உதவி புரிபவருக்கும் மூன்றாவது வகுப்பு விருது. மீட்பவரின் உடலுக்குக் கடுமையான காயங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவதில் தைரியமாகவும் உடனடியாகவும் ஈடுபடுபவருக்கும் வழங்கப்படுமாம்.

முதல் வகுப்புக்கான பதக்கம் தங்க மூலாம் கொடுக்கப்பட்டிருக்குமாம். இரண்டாவது வகுப்புக்கான பதக்கம் வெள்ளியாலும், மூன்றாவது வகுப்புக்கான பதக்கம் வெங்கலத்தாலும் செய்யப்பட்டிருக்குமாம்.

மனிதாபிமான முள்ளவர்களுக்கு இந்த விருதுகளைக் கொடுப்பது ஏன் என்றே நமக்குப் புரியவில்லை. வர வர, இந்த அரசிலே நடைபெறுகின்ற காரியங்களெல்லாம் வீண் பகட்டும், வெற்றாரவாரமுமாகவே இருக்கக் காண்கிறோம்; இந்த விருதுகளைப் பெற போலிகளும் தகுதியற்றவர்களும் முன் வருவார்கள்-முன்னுக்குக் கொண்டு வரப்படுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. இதனால், மனிதாபிமானத்திற்கு விரோதமான செயல்கள் தாம் மலியும் என்பதிலும் ஐயமில்லை.

இந்த அரசினர் உண்மையில் மனிதாபிமான முள்ளவர்களாயிருந்தால் அயல் நாடுகளிலே இந்நாட்டின் குடிமக்கள் மான பங்கப்படுகின்ற நிலையைமாற்ற முன்வர வேண்டும், வேண்டாத விருந்தாளிகளாய் இங்கிருந்து புறப்பட்டுப் போகின்றவர்களைத்தடுத்து நிறுத்தியும், அங்கு உள்ளவர்களை அழைத்து வந்து பிழைக்க வழி செய்யவும் முன் வர வேண்டும். அதை விட்டுவிட்டு விருது வழங்குகிறார்களாம் விருது !

அழகழகாய் உருவாகிறது

அக்டோபர் **முல்லை**

அன்னையர் நாடே !

ஆசிரியர் **கண்ணதாசன்** எழுதிய உணர்ச்சியூட்டும் புதிய கவிதை.

அதிசயித்தாளே !

அருப்புக் கோட்டைக் கவிஞர் எம். எஸ். இராமசாமியின் சிரிப்பூட்டும் சிங்காரக் கவிதை.

நடிகை நளினி

மு. கணபதி எழுதிய உள்ளத்தைத் தொடும் நீளக் கதை.

நிர்வாண யோகிகள்

பிரெஞ்சு நாட்டு உலகப் பேரறிஞர் வால்டேர் எழுதிய கிண்டலும் நகைச்சுவையும் கலந்த சிறு கதை.

பொறுமையின் குன்றம்

அமெரிக்க நாட்டுத் தந்தை அப்ரகாம் லிங்கனின் சொந்த வாழ்வில் நடந்த சோகக் கதை. நாகநாதன் எழுதுகிறார்.

கரேட்டு

நாரா நாச்சியப்பன் எழுதிய சின்னஞ்சிறு நாடகம். திகைக்க வைக்கும் !—அதேசமயம் சிரிக்கவும் வைக்கும் !

இன்னும் பல

இத்தனைக்கும் விலை இருபத்தைந்து காசுகளே !

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை

விவரங்கட்கு

முல்லை சென்னை-6.

ராசிபலன்

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

சடலத்தைக் கண்டு அதிர்ந்து போய் விட்டாள் அல்லி. பூமாலையின் மேனியில் நீல நிறம் ஏறி நின்றிருந்தது. அவள் உடலிலே நஞ்சு கலந்துவிட்டது என்பதை யூகிக்கத் தவறவில்லை அல்லி.

முன்பு, குழந்தை அருள்மணியின் 'ராசி பல'னைப்பற்றி குசு குசுத்த மக்கள், இப்போது சற்று உரக்கவே பேசவும் குழந்தையை ஏசவும் தொடங்கிவிட்டனர். ஊருக்குத்தான் என்ன கேடோ?

"தாயையும் விழுங்கிவிட்டானே, தறுதலைப் பயல்!" என்ற அவச் சொல், ஒன்றுமே புரியாத இளங் கன்றின் மீது விழுவது அல்லிக்குப் பொறுக்கவில்லை. ஊராரின் உறுத்தல் பார்வையிலிருந்தும் ஒன்றுக்கும் உதவாத உளறலிலிருந்தும் குழந்தையைக் காப்பாற்றவே அவள் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டாள்.

பனிரெண்டு ஆண்டுகள் பிறந்து விட்டன. பாடு பல பட்டுப் படிக்க வைத்தாள் அல்லி. அருள்மணி அப்போது பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். நாடு போற்றும் நல்ல மகனாக அவனை வளர்க்க ஆசைப்பட்ட அல்லி அவன் பிறப்பு வளர்ப்பு அத்தனையும் ஒளிக்காமல் அவனுக்குச் சொல்லியிருந்தாள். அத்தை அல்லி தன்னை வளர்த்துப் பெரியவனாக்க ஏற்றுக் கொள்ளும் இன்னல்கள் அனைத்தையும் அறிந்து, அவளை நடமாடும் தெய்வமாகவே பாவித்து வந்தான் மணி.

ஒரு நாள், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மாரடைப்பு அல்லியை இறப்புலகுக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டது. தனது கண் கண்ட தெய்வம் கண்ணுக்கெட்டாத தொலைவுக்குச் சென்றுவிட்டதால் அவன் இதயத்தைக் காரிருள் கப்பிக் கொண்டது. ஏதும் புரியாமல் ஏங்கிக் கிடந்துவிட்டு, 'போதும் வாழ்வு' என்று வாழ்வில் புளிப்பு ஏற்பட்டுத் தற்கொலைக்குத் துணிந்துவிட்ட போதுதான்...எங்கிருந்தோ, யார் மூலமாக அறிந்தோ அங்கு வந்தார் ஆசிரியர் நல்மொழியார். அருள்மணி நல்ல பிள்ளை என்ற நல்லெண்ணம் கொண்டிருந்த அவனது தமிழாசிரியர், நல்மொழி!

★

"ஐயா! இதுவரை, எனக்கு ஆதரவு தந்த அத்தனைபேரும் செத்துப்போய் விட்டார்கள். அதற்காக எல்லோரும் என்னைத் தூற்றுகிறார்கள். என்னுடைய ராசிபலன் அப்படிப்பட்டது என்கிறார்கள். இந்த நிலையில் நீங்கள் ஆதரிக்க முன்வருகிறீர்கள். என்றால் தங்களுக்கும் இன்னல்..."

"ஏதும் ஏற்பட்டு விடாது!" என்று கூறி அவனை மேலும் பேச விடாமல் தடுத்து அவன் வெள்ளை உள்ளத்திலிருந்து வெளிக் கிளம்பும் கள்ளமிலாப் பேச்சுக்காகப் பரிதாபப்பட்டார். இளஉள்ளங்களை எந்த அளவுக்குக் கெடுத்துவிடுகிறார்கள் வளர்ந்த பெரியவர்கள்!

"நாளை எனக்குத் தீங்குவரும் என்று, நீ யூகித்துச் சொல்கின்ற நிச்சயமில்லாத ஒன்றை நம்பிக் கொண்டு, இன்று நான் மனிதன் என்ற மனஉணர்வோடு நடந்து கொள்வதைத் தடுக்கிறாயா, மணி! பிறர்க்கு உதவி வாழ்வதினால் பெருந் தீங்கு நேர்வதாயினும் எனக்கு விருப்பமே மறுப்பு. ஏதும் சொல்லாமல் என் இல்லத்திலேயே தங்கிவிடு. நீ சொல்வதுபோல் இதுவரை நடந்தவையாவும் உன் ராசிபலனால்தான் நடந்தன என்பது என்ன உறுதி? அப்படியேதான் நடக்கும் என்பதும் என்ன உறுதி? அப்படித்தான் நடப்பதானாலும் உன்னைப் போன்ற உத்தமப்பிள்ளைக்காக வாழ்க்கையின் இன்ப துன்பங்களைப் பெருமளவுக்குச் சுவைத்துவிட்ட இந்த முதியவனின் உயிரைப் பணயமாக வைக்கவும் எனக்கு இசைவுதான்!"

நல்மொழியாரின் பாசமிகுந்த பரிவுரையைக் கேட்டு அருள்மணியின் கண்களிலே நீர் துளிர்த்தது.

"நீ எதற்கும் வருந்த வேண்டாம் மணி! நான் பழுத்துப் போய்விட்ட இலை! நீ துளிர்விட்டுத் தழைத்து வரும் கொழுந்து! என்னை நம்பித்தான் வாழவேண்டும் என்ற நிலையிலே என் பிள்ளையுமில்லை, பெண்ணுமில்லை; என் பிள்ளையைத் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளும் தகுதிக்கு ஆளாக்கி வைத்திருக்கிறேன். என் பெண்ணையும் நல்லவன் ஒருவனுக்கு இல்லக்கிழத்தியாக்கியிருக்கிறேன் இனி என் கையை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். உழைக்க, இன்னும் எனக்கு உடலிலே உரம்இருக்கிறது. ஆகவே, இனி நான் இருக்கிறேன். என் எதிரே இறகுகள் வளர்ந்து முற்றுப்பெருப் பறவையைப்போல் நீ இருக்கிறாய்! உன்னைக் காப்பாற்றுவேன். மேலும்படிக்கவைத்துத் தன்னையே காப்பாற்றிக்கொள்ளும் உத்தம மகனாக உருவாக்குவேன் உன்னை. இது திண்ணம்!

"மணி! உன் பிறப்பில் ஏதோ தவறு இருப்பதாக எண்ணிக் கலங்கித் தவிக்கிறாய் இன்னமும்! கேள் மணி, கேள்! யார் பிறப்பிலும் எந்த தவறுமில்லை. பிறந்த பிறகுதான் பிறக்கின்றன தவறுகள் எல்லாம். உயிரை ஒழிக்கத் துணிந்த நீ, ஓர் உயிரைக் காப்பாற்றுவதிலிருக்கும் கஷ்டத்தை உணரமாட்டாய்! இனி, நீ என் மகன்! என்ன சரிதானா?"

நல்மொழியாரின் அன்பான வார்த்தைகள் அருள்மணியைக் கவர்ந்து விட்டன. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

"இன்னும் ஏன் கண்ணீர், மணி! உன் 'ராசி பலன்' என்னை ஒன்றும் செய்துவிடாது. வாழ்க்கையிலே ஏற்படுகிற இன்ப துன்பங்களுக்கு, எதை எதையோ யார் யாரையோ காரணங்களாகக் கற்பனையால் கண்டு நிலைமையைச் சமாளிக்க முற்படுகிறது மனித மனம்! மனத்தின் தன்மையே அதுதான்?" நல்மொழியார் அருள்மணியின் கண்களைத் துடைத்தார். ஆனால் அவர் கண்களிலும் அப்போது நீர் துளிர்த்திருந்தது. ஆம்...அது ஆனந்தக் கண்ணீர்!

தளர்ந்து போன மணியின் நெஞ்ச வானிலே நம்பிக்கை எனும் கதிரவன் எழுந்து நின்றான். அகத்தின் ஒளியை முகம் தெற்றெனக் காட்டித் திகழ்ந்தது.

சற்று நேரத்துக்குமுன் மங்கலாக இருள் கவிந்திருந்த அந்த அறையிலே ஒளி சிந்திக்கொண்டிருந்தது மின் விளக்கு. சூழ்ந்திருந்த இருள், ஓடி மறைந்ததுவோ, ஊர் கெடுப்போர் உள்ளங்களில்?

அறைக்குள் ஒளியேற்றி வைத்த ஆசிரியர் நல்மொழியார், அருள்மணியின் இருண்ட வாழ்க்கையிலும் ஒளியேற்றி வைத்துவிட்டார்!

இலக்கியச் சுவை

ருக்மணி இராமநாதன், பி.எஸ்சி.

7. செம்மை நெறி

செம்மை நெறியில் வாழுபவர் என்று தம்மைத்தாம் கூறிக்கொள்ளும் தம் பட்ட நெறியாளர் பலர் இன்று உண்டு. செம்மைநெறி என்ற ஒன்று எப்படி இருக்கும்? எங்கு இருக்கும்? எப்போது வரும்? வரன்முறைக்கு உட்பட்டதா? என்ற வினுக்கள் எழுதல் இயல்பு.

செம்மை நெறி என்பது அந்த அந்த நூற்ருண்டிற்கேற்ப மாறியும், திரிந்தும், மக்கள் பலரால் மாண்புடையது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டும் வரும் நெறியே ஆகும். மக்களிற் பலர் யார்? என்று குறிப்பிட்டுக் கூறமுடியாது என்ருலும் நல்லியல்புடையோர் என்று மட்டும் கூறுதல் கூடும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தமிழகத்திற் செம்மை நெறி என்பது யாது? என்று ஆராயப் புகுந்தால் சில அரிய செய்திகள் சுவைபடக் காணலாம்.

“நாடா கொன்ருே
காடா கொன்ருே
அவலா கொன்ருே
மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை
வாழிய நிலனே”

(புறம்-187)

பரந்துபட்ட மாநிலம் எவ்வளவு ஏற்றத்தாழ்வுகளை உடையது? ஒரு புறம் ஓங்கியுயர்ந்த மலை, மறுபுறம் முடிவற்ற பள்ளம் - பிறிதொருபுறம் காடு, சுற்றிலும் நாடு! இது நாம் காணும் நில இயல் நிலையாகும். இத்தகைய வேறுபாடுகளையும் தன்னகத்தே கொண்ட மண்-அத்தகைய மன வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் பெற்றிருக்கின்றது. எவ்வளவு வேறுபாடுகள் நிலவினுலும் அந்த உலகில் ஆடவர் மட்டும் நல்லவராக இருப்பின், செம்மைநெறியில் வாழுபவராக இருப்பின் நல்ல வளனேடு வாழமுடியும். இந்த அரிய செய்தியைச் செம்மை நெறியின் துணைகொண்டு அறிய முடிகின்றது.

காலம் நாள்தோறும் வேறுபட்டுக் கொண்டு வருகிறது. நல்லவர்கள் என்று நாடு போற்றியவர்கள் -அல்ல தீயவர்கள் என்று ஏடு தூற்றுகின்றது. தீமையையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்று மக்கள் கருதியவை நன்மைக்குத்தான் என்ற உண்மையை உணரத் தொடங்குகிருர்கள். இது காலக் கழிவில் வளர்ச்சி பெறும் அறிவுடைய சமுதாயம் அடையும் மறுமலர்ச்சியேயாகும்.

“கடவுளே இல்லை” என்ருல் நூற்ருண்டுகளுக்குமுன் கல்லாக்கிவிடுவார்கள் என்ற நிலை இருந்தது.

இன்று. இருந்தால் என்னிடம் பேசச் சொல்லமுடியுமா? என்று கேட்கிருர்கள்'

ஆத்திகர்கள் அவர்களை அடக்க முடியாததோடு அடக்கமாக நாத்திகர்கள் என்று நாவால்கூட வெளியிற் கூருமல் மனத்துக்குள்ளே திட்டுகின்றனர்.

'கடவுள் யார்?' - கேட்பதே பாவம் என்ற கீழ்நிலை இருந்திருக்கிறது.

'கடவுளுக்கு உருவமில்லை - அருவுருவான அன்புடையவர் - ஒளிவடிவானர்-அருள்வடிவானவர்-பிறர் துயர் துடைப்பவர்'-இவை சிலரால் சில போழ்து உதிர்க்கப்பட்ட சொற்களாகும்.

'கடவுளுக்கு விளக்கம் கேட்பதே பாவம்' என்ற நிலைபோய், விளக்கம் தந்தால் சற்று அமைதி ஏற்படும் என்ற எண்ணம் வளர்ந்தது. வளர்ச்சி பெற்ற மக்கள் கடவுள் என்பது தேவையா?' என்று விரைந்தார்கள். விளைவு, அவர்களைக் கடவுளை மதியாத நாத்திகர்கள் என்று மக்கள் தூற்றத் தொடங்கினர்.

'கடவுள்' என்று ஓயாது கூச்சல் எழுப்பாதே! யாரப்பா கடவுள்? என்று இன்றல்ல, நேற்றல்ல கி. பி இரண்டிலேயே ஒருவர் கேட்டிருக்கிருர். கேட்டவரே. ஏற்ற -விடையையும் கூறி விட்டார். இல்லையென்ருல் அவரையும் மக்கள் மதிக்கமாட்டார்கள். உண்மையை உணர்ந்தும் உரைத்தற்கு முடியாத நடுநிலையாளர்கள் பலர் இன்னும் உலவுகின்றனர். காரணம்: நாடு மதிக்க நாம் வாய் திறக்கக்கூடாது உண்மையைக் கூறினுல் உலகில் பெற வேண்டிய பெருமைகள் குறைந்து விடும் என்ற தவருன கருத்துக்களேயாகும்.

'இன்று இருக்கின்ற மக்களிற் சிலர் மதிக்காவிட்டாலும் நாளைய சமுதாயம் நல்லவை தீயவை பகுத்தறிந்து பகுத்தறிவு கொண்டு பாராட்டும்' என்பது மட்டும் உறுதி.

கடவுளைப்பற்றிய ஒரு கருத்தைக் கூறுதற்கு இவ்வளவு முன்னுரையை நாடவேண்டிய அளவு நாடு நாத்திகர்களை வளர்த்து இருப்பதே காரணம்.

யாருக்கப்பா வணங்குவாய்?

நாட்டைக் காட்டிக் கொடுத்து வேட்டையாடும் வீணரை இல்லாமல்-நாடு-நம்நாடு- இது பிறருக்கு அடிமை நாடல்ல என்ற நிலைக்குப் பாடுபட்டுப் போரிட்டுப் புண்பெற்று மண்ணில் மடிகின்ற மாவீரனைக் கண்டு வணங்குவேன்.

யாருக்கப்பா ஆற்றல் உண்டு?

வேட்டைக்குச் சென்ருலும் வேழத்தை வீழ்த்த எண்ணி வேலை இழந்தாலும் வேதனையை விடச் சாதனை பெரிதென்று மகிழும் இனம் தமிழினம். போருக்குச் சென்று புறமுதுகு காட்டாத புகழ்பெற்ற மக்கள் தமிழ் மக்கள். அத்தகைய அளவிளாத ஆற்றலுடைய மக்கள் தன்னையொத்த வலிமை மிக்க வீரனேடுபோரிட்டு, எதிர்த்துவந்த யானையை எறிந்தவேல்வீழ்த்த-தடுக்க முடியாத வேளையில் மார்பகத்திற் பாய்ந்த அம்பால் மாய்ந்தனராக-அவர் பெயர்கூறிட 'நடுகற்கள்' நம்நாட்டினில் உண்டு.

அந்த “நடுகல்” கூறிடும் நயமான வீரம்தான் வணங்கத்தக்கதும் - போற்றத்தக்கத்தும்-புகழத்தக்கதும் ஆகும். அதுதானப்பா அனைவரும் போற்றத்தக்க செம்மை நெறி என்கிருர். புறநானூற்றுப் புலவர் மாங்குடிக்கிழார்.

“ஒன்னுத் தெவ்வர்
முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற்
களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங்
கடவுளு மிலவே”

(புறம்-335)

நெல்லையும் பூவையும் இட்டு வணங்கத்தக்க செம்மை நிலை வாழ்வைப் பெற்ற வீரத்திருமக்களே நடுகற்களாகி, நாட்டிற்கு வழிகாட்டும் செம்மை நெறியாளராய் விளங்குகின்றனர்.

இதைவிட்டுக் காசைக் கொட்டி வணங்கி அழியும் சமுதாயத்திற்கு நடுகற்கள் ஒரு படிப்பினையாகும். நாட்டிற்குப் போராடி நல்லுயிரை இழந்த மாவீரர்களே போற்றிப் புகழத்தக்கவர்கள். அன்றி வீண்காசிற்கு விலையாக வீடுபேறு தருவதாய்க் கூறும் கடவுளர்கள் ஏமாற்றுக்காரர்களே.

அடுத்த கிழமை 'சிலம்பிற் காதலி

“ஆரைப் பார்த்து நீங்க அசட்டு விழி விழிக்கிறீங்க?” என்று தாம்பரம் லலிதா, டி. ஆர். இராமச்சந்திரனைக் கேட்கிருரோ?

(ஆளுக்கொரு வீடு)

மண்டையிடி
ஸ்நான பஸ்பம்
எந்த மருந்தினுலும் தீராத மண்டையிடி, ஒத்தைத் தலைவலி, இரட்டைத் தலைவலி, மண்டை குத்தல், குடைச்சல், முதலான மண்டை சம்பந்தமான வியாதிகளுக்கு மிகச் சிறந்த ஸ்நான பஸ்பம்.
5 வேளை மருந்து ரூ. 4-00
தேவைக்கு எழுதவும்.
சம்பு இண்டஸ்ட்ரீஸ். சேலம்-2.

தென்றல் முல்லை இரண்டுக்கும்
கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை :—
மானுமதுரை — தங்கச்சி மடம்
காரியாபட்டணம் — கன்னமங்கலம்
சோளிங்கபுரம் — சுங்குவார்சத்திரம்
ஆற்காடு — மகாபலிபுரம்
திருத்தணி — குன்றத்தூர்
விவரங்கட்கு
தென்றல் : சென்னை-6

வெண்பாப் போட்டி-7.
★
ஈற்றடி
இல்லற வாழ்வே இனிது
இறுதி நாள் 8-10-60.
தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

அமைச்சர் இராமையாவின் அபாரமான கேள்வி !

பெற்றெடுத்த பொன்னாட்டிற்கு-பேணி வளர்க்கும் இத் தென்னாட்டிற்கு-இன்பத் திருநாட்டிற்கு-தண்புனல் வரம் பெறுத்த தமிழ்நாட்டிற்குத் ''தமிழ்நாடு'' என்று பெயரிட வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாகவே அறிஞர் பெருமக்களும், அரசியல் கட்சிகள் சிலவும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடக்கழகம் ஆகிய இயக்கங்களும் கேட்டுக் கொண்டு வந்திருக்கின்றன!

அண்மையிலே, நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் கூட, ''நான் இறப்பதற்கு முன் தமிழகத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வையுங்கள்; பார்த்து விட்டுச் சாகிறேன்'' என்று நெஞ்சத்தைத் தொடும் தன்மையிலே வேதனையோடு வேண்டுகோள் விடுத்தார், தமிழக அமைச்சர்களுக்கு.

நகராட்சி, ஊராட்சி, உள்ளாட்சி மன்றங்கள் கூட, 'தமிழகத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடுங்கள்'' என்று தீர்மானங்கள் போட்டு அனுப்பியவண்ண மிருக்கின்றன!

ஆனல், 'தமிழ் ஆட்சி மொழி ஆகிவிட்டது: ஆக்கி விட்டாய்!' என்று எடுத்து முழங்குகின்ற எத்தர் கூட்டமோ சித்தத் தெளிவோ, சிந்தனை செய்திடும் நிலையோ அடைந்தார்கள் இல்லை! மாருக வீறு கொண்டெழுந்து, விலாப்புடைக்க, விழிகளிலே கனல் தெறிக்க, நாடி நரம்புகள் புடைக்க, தலைகால் தெரியாமல் தாக்குகின்றனர்! தங்கள் அறியாமையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டிக் கொள்ளுகின்றனர்!

அண்மையில் மின்சாரத்துறை அமைச்சர் திரு. வி. இராமையா அவர்கள் அபாரமான (!)கேள்வியொன்றைக் கேட்டுத் தன் சொரணையற்ற தன்மையைத் தெளிவுற விளக்கிக் காட்டியிருக்கிருர்.

''எல்லா மலர்களுக்கும் ரோசா என்று பெயர் வைத்துவிட்டால், மணம் வந்து விடுமா? பெயரில் என்ன இருக்கிறது? சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கும்படி சிலர் கூறுகிருர்கள். தமிழ்நாடு என்று பெயர் வைத்து விட்டால் சோறு அதிகமாகக் கிடைத்து விடுமா? அல்லது வேறு வசதிகள் பெருகி விடுமா? இன்னல் தான் கூடும்'' என்றுகணைபல தொடுத்துக் கண்டனம் விடுத்து மகிழ்ந்திருக்கிருர், மதியற்ற மந்திரி!

'எல்லா மலர்களுக்கும் ரோசா என்று பெயர் வைத்து விட்டால், மணம் வந்து விடுமா?! 'நல்ல கேள்வி! கேட்கப்பட வேண்டியது தான்!' என்று சில ஏக இந்தியத் தாசானு தாசர்கள் ஆமோதித்து, ஆரவாரம் செய்து, அறிவுத் திருவே! ஞான குருவே! முற்றுங்கற்ற முதறிஞரே! முத்தமிழின் வித்தகரே! வாழ்க! வாழ்க!!' என்று வாழ்த்தி மகிழலாம்,!

ரோசா ரோசாதான் !

எல்லா மலர்களையும் பறித்து வைத்துக் கொண்டு இவை அனைத்துக்கும் ரோசா மலர் என்று பெயர் வைத்து விடுங்கள் என்று எந்த மடையனும் சொல்லமாட்டான்; மாடு மேய்க்கும் மருதனாக இருந்தாலும் சரி ஆடுமேய்க்கும் ஆறுமுகமானுலும் சரி, கப்பங் கொல்லைக் காவல் புரியும் காத்தனாக இருந்தாலும் சரி, ரோசா ரோசாதான்; மற்றவை மற்றவைதான் என்று எளிதாகக் கூறிவிடுவார்கள் என்பது மட்டுமல்ல; மண்டூகங்களைப் போல். எல்லாமலருக்கும் ரோசா மலர் என்று பெயர் வைக்கச் சொல்லமாட்டார்கள்; அப்படி உள்ளத்திலே கிஞ்சித்தும் நினைவு கொள்ளவும் மாட்டார்கள்!

இதைப் போலவே, தமிழகத்தைப் பொறுத்த வரையிலேதான் தமிழ்நாடு என்று வைக்கச் சொல்லுகிருர்களே தவிர, இல்லாத இந்தியாவை பதினைந்து மாநிலங்களை ஒன்று படுத்தி, அதற்கு இந்தியா' என்று பெயரிட்டழைப்பதைப் போலவோ, ஆந்திரம், கேரளம், கன்னடம், பஞ்சாப், வங்கம், போன்ற மாநிலங்களையும் சென்னையோடு சேர்த்து, தென்னகத்துக்கு, இன்பத்தமிழகத்துக்குத் ''தமிழ்நாடு'' என்று பெயரிடுங்கள் என்று எடுத்துக் கூறவில்லை; எந்தத் தலைவரும், எந்த அரசியல் இயக்கமும் எடுத்துக் கூறவில்லை!

அழு! நன்ருக அழு!! கதறித் துடித்துக் கண்ணீர் விட்டுச் செந்நீர் சிந்திச் சிந்திச் செத்துப்போ!'' என்று உள்ளத்திலே உணர்ச்சி அலைகளுக்கு அணைபோட்டுத், தாய்த்தமிழ் மீதே பாரத்தைச் சுமத்தி, சொரணையற்ற கூட்டத்தை வாழ விட்டு வைத்திருக்கிறது, தமிழகம். இல்லாவிட்டால், என்றோ இந்த ஈனப் பிறவிகள் இருந்த இடந் தெரியாமலே அழிக்கப்பட்டிருக்கும்!

ஆம். பனரஸ், வாரணசி ஆக்கப் பட்டதை, கோல்டுகோஸ்டு கானவாக ஆகியதை, ஜாவா இந்தோனேசியாவாக மாறியதை, சையாம் தாய்லாந்து என்று மாற்றப்பட்டதை இந்தோசைன வியட் நாம் என்று அழைக்கப் படுவதை சென்ரல் பிராவின்சு மத்தியப் பிரதேசம் என்று பெயர் சாற்றப் பட்டதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தும், தமிழகத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டால்,

''தமிழ்நாடு'' சோறுபோடுமா ?

மாருக தமிழ் வழங்குகின்ற—தமிழர்கள் வாழ்கின்ற - தமிழர்களை வாழ வைக்கின்ற - தமிழர்களைப் பெற்றெடுத்த - இச்சென்னை மாநிலத்துக்கு— தமிழகத்துக்குத்தான் தமிழ்நாடு என்று பெயர் வைக்கச் சொல்லுகிருர்கள்!

இந்த அடிப்படையைக் கூட ஆய்ந்தறியும் ஆற்றலற்றுப் போன அமைச்சர், மாற்றுக் கட்சியினரைத் தூற்ற வேண்டு மென்ற வெறியோடு எல்லா மலர்களுக்கும் ரோசா என்று பெயர் வைத்து விட்டால் மணம் வந்து விடுமா? என்று சொரணையற்ற முறையிலே சொத்தைவாதம் புரிந்திருக்கிருர்; புலம்பி அழுதிருக்கிருர்!

மானத்தை விட்டேனும் ஊனத்தை வளர்க்கும் மரக்கட்டைகள் !

உய்த்துணரும் சக்தியற்றுப் போன இந்தச்சண்டமாருதச் சகலகலாவல்லவர்தான் ''தமிழகத்துக்குத் தமிழ்நாடு

சோறு கிடைக்குமா? என்று கேட்கும் கேடு கெட்டவர்களை-சோற்றுத் துருத்திகளை இத்தாய்நாடு தாங்கிக்கொண்டிருக்குமா! வாழத்தான் விடுமா ?

பம்பாய்துண்டாயிற்றே! பயன் என்ன கண்டீர் ?

ஏன் ? பல காலமாகவே பம்பாய் என்றழைக்கப்பட்ட மாநிலம் இன்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மகாராட்டிரம், குசராத் என்று மாற்றப்பட்டு விட்டதே! ஏன் ? அண்டா நிறைய, குண்டான் நிறைய, குடம் நிறைய கிடைக்கும் என்ரு? அல்லது விட்ட குறை தொட்ட குறை; தொல்லை துயரங்கள்; இன்னல் இழுக்குகள் அழிந்துவிடும் ஒழிந்துவிடும்; மடிந்து மக்கிவிடும் என்ரு? மந்த புத்தி படைத்த மந்திரிமாரே! பதில் என்ன கூறப் போகிறீர்கள் ?

ஒரியா மொழி வழங்கும் பகுதி ஒரிசா என்றழைக்கப்படுவதும், அசாமி

ரோசா, என்றால் மணக்குமா ?

என்று பெயர் வைத்தால் சோறு அதிகமாகக் கிடைத்து விடுமா? அல்லது வேறு வசதிகள் பெருகி விடுமா?'' என்றும் முழக்கி இருக்கிருர்!

இப்படியொரு கேள்வியை யாரேனும் வாரணசியிலே கேட்டிருந்தால், இந்தோனேசியாவிலே கேட்டிருந்தால். தாய்லாந்திலே-வியட் நாமிலே. மத்தியப் பிரதேசத்திலே கேட்டிருப்பார்களேயானல், நிச்சயமாகச் சமாதி கட்டப் பட்டிருக்கும்; கேட்ட ஆசாமிக்கு அல்ல; அவர் அரசியல் வாழ்வுக்கு!

ஆனல், எதையும் தாங்கும் இதயம் படைத்த இலட்சிய வீரர்களின் கூடாரமாகத் திகழ்வது இத்தமிழ்நாடு என்கிற காரணத்தால் ஐயோ! தமிழ்த்தாயே! இப்படிச்சில ஈனப் பிறப்புகளை ஈன்றெடுத்து விட்டாயே! மானத்தை இழந்தேனும் ஊனத்தை வளர்க்க விரும்பும் மரக்கட்டைகளைப்பெற்றெடுத்தாயே! நீ

மொழி பேசப்படும் பகுதி அசாம் என்று வழங்கி வருவதும், வங்கம் வங்க மொழியால் அழைக்கப்படுவதும், ராசஸ்தான் ராசஸ்தானி மொழியாலேயே திகழ்வதும் ஏன்? சோறு கிடைக்கும் என்ரு? இல்லையே!

பின் ஏன் ? மொழி வழி அடிப்படையிலே மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும்; பிரிக்கப்பட்ட மாநிலங்கள் மாநில மொழிகளின் பெயராலேயே வழங்கப் பட வேண்டுமென்ற காரணத்தாலேயே வங்கம் வங்கமாகவும், ஒரியா ஒரிசாவாகவும், இராசஸ்தானி இராசஸ்தானகவும், பஞ்சாபி பஞ்சாகவும் வழங்கி வருகிறது! இதை உணராமல், பெயர் மாற்றத்தால் சோறு கிடைக்குமா? என்று கேட்கும் இந்தச் சோம்பேறிக் கூட்டத்தைப்பற்றி- சோற்ருலடிபட்டுச் சொரணையற்றுப் போன சொத்தை வாதக்காரர்களைப்பற்றி நாம் என்னென்று எண்ணுவது? என்னவென்று எடுத்தியம்புவது ?

பெயர் மாற்றத்தால் பூகம்பம் ஏற்படுமா ?

பெயர் மாற்றத்தாலே ஏதோ பூகம்பமும், இடிமழையும், வருவதுபோலவும், நாடு நகரங்கள், கோட்டை கொத்தளங்கள் வீடு வாசல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, ஒழிக்கப் பட்டு, நாடு சுடுகாடாக- எலும்புக் கூடுகளின் மேடாக ஆகிவிடுவது போலவும் எண்ணிக்கொண்டனரோ, என்னவோ? பெயர் மாற்றத்தால் இன்னல்கள் வந்துவிடும்' என்று வேறு கூறித் தம்மேதா விலாசத்தைக்காட்டிக் கொண்டிருக்கிருர், அமைச்சர் !

பெயர் மாற்றம். செய்யப்பட்ட நாடுகளான வாரணசியிலே, கானவிலே, இந்தோனேசியாவிலே, தாய்லாந்திலே, வியட்நாமிலே, மத்தியப் பிரதேசத்திலே, வங்கத்திலே காணுத காண முடியாத இன்னல் இன்பத் தமிழகத்துக்கு மட்டும் எப்படி வரும் ?

பாடத் தெரியாத பாடகருக்குப் பக்க மேளம் சரியில்லை; நொண்டிக் குதிரைக்குத் தடுக்கியதுதான் சாக்கு என்பது போல். தமிழகத்துக்குத் ''தமிழ்நாடு'' என்று பெயர் வைக்க வேண்டுமென்ற வேட்கையோ, ஆர்வமோ, அக்கறையோ இல்லாதவர்களுக்கு. பெயர் மாற்றத்தால் இன்னல் மட்டுமல்ல; பதவிக்கே கூட ஆபத்துதான் !

எனவேதான், எதை யெதையே எண்ணி எப்படியெப்படியோ புலம்பி. எங்கெங்கே சுற்றிக்கொண்டிருக்கிருர்கள் அமைச்சர்கள் !

தாய்நாட்டுக்கு-இன்பத் தமிழ்நாட்டுக்கு-பெற்றெடுத்த பொன்னாட்டுக்கு-தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுக்கின்றனர்; வெறுக்கின்றனர்! வரட்டுக் கூச்சலிட்டுக் குட்டையைக் குழப்புகின்றனர்; மூர்க்கத்தனமான முரட்டு வாதத்திலே மூழ்கித் திளைக்கின்றனர்!

நன்ருக அந்த அழுக்குக்குட்டையில் ஊறித் திளைக்கட்டும்! வளரட்டும்! வாழட்டும்! வருங்காலம் நிச்சயமாக இவர்களுக்குந் பாடம் புகட்டியே தீரும்.

—எ. கலைமுகிலன்.

★

திருக்குறள் கட்டுரைப் போட்டி

பரிசுத்தொகை ரூ. 101

ஆம்பூர் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக, தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகள் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், மாணவிகளுக்காக நடத்தப் படும் திருக்குறள் கட்டுரைப்போட்டியில கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் ''திருவள்ளுவரும் உலக அமைதியும்'' என்ற தலைப்பின்கீழ் 200 முதல் 250 வரிகள் வரை எழுதி ''எம். வி. சாமி, கட்டுரைப் போட்டிக்குழு, திருவள்ளுவர் கழகம் ஆம்பூர் (வ ஆ. மா)'' என்ற முகவரிக்கு அனுப்புவதுடன், போட்டிக்கான நுழைவுக்கட்டணம் ரூபாய் ஒன்றை மேற்குறித்த முகவரிக்கு ''எம். ஓ.'' செய்து அதன் ரசீதை கட்டுரையுடன் இணைத்து அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். போட்டி முடிவுநாள் 31-10-60 கட்டுரைப்போட்டிக் குழுவினரால் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைக்கு ரூ. 101 பரிசு அளிக்கப் படும்.

வெண்பாப் போட்டி

தொந்தி பெருத்தவண்டி தோல் சுருக்கம் கண்டவண்டி
மந்திதனைப் போன்றமுக மன்மதண்டி - புந்திகெட்டுச்
சேர்த்த பணங்காட்டிச் சேயிழைக்கு மாலையிடப்
பார்த்தானே பாவிப் பயல்!

—க. பொ. இளம்வழுதி. களிதீர்த்தான்குப்பம்

கொஞ்சுவார், கோதுவார், கூடுவதர்(கு)என்றனிடம்
கெஞ்சுவார், இன்றயலூர்க்(கு)ஏகினர் - நெஞ்சில் தீ
வார்த்தாற் போல் சுட்டெழுந்து வானத்தில் வெண்ணிலவோன்
பார்த்தானே பாவிப் பயல்.

—காரை, தமிழரசி. காரைக்கால்.

நேர்கொண்ட பார்வை நிலம்நோக்க மாலையினில்
தேர்போலச் சென்றாள் தெருநடுவே - பார்வையினால்
ஆர்க்குங் கடலாய் அவள்மனத்தைச் செய்திடவே
பார்த்தானே பாவிப் பயல்!

—கலையழகன், நெய்வேலி

பன்னூறு காலம் பனிநீர் படிந்தாலும்
துன்னீரம் கொள்ளாச் சுடுமண்போல் - என்மகற் போற்
பார்த்தேன் படிப்பித்தேன் பல் பொருளை யுந்திருடப்
பார்த்தானே பாவிப் பயல்.

—வித்துவான். யோசேப்பு. கனகாப்புரம்.

தங்கத் தமிழினையே தண்பொழிலாய் வீசிவரும்
மங்கா மதிநிறைமென் 'தென்றலே - உன்றனுக்கு
வார்த்தவெண் பாவனுப்பி வந்துலவு மென்றேங்கிப்
பார்த்தானே பாவிப் பயல்.

—புதுவை, வைத்தியநாதன் ஆமதாபாத்.

உடல்பொருள் ஆவிமுதல் உண்டான எல்லாம்
மடமானே உன்றனுக்கே! மாசு - படியாத
வார்ப்படமே என்றெல்லாம் வாயளந்து கைவிடவே
பார்த்தானே பாவிப் பயல்.

—க. குணசேகரன் 69 திருப்பள்ளித்தெரு, சென்னை-1.

தண்ணீர் எடுக்கத் தனித்திருந்தேன்; அன்றொருவன்
உண்ணீர் கொடுவென் றுரைசாற்றி - என்னிடத்தே
வேர்த்துவந்தான் நீருற்ற உண்ணுமல் ஆவலுடன்
பார்த்தானே பாவிப் பயல்.

—பொ ச இராமசாமி, அருப்புக்கோட்டை.

சின்னக் குழந்தைகளால் தென்னை மரத்தோப்பில்
கன்ன விலைப் பந்தல் கட்டியதைச் - சின்னமுற
ஆர்த்தெழுந்து பேர்த்திடத்தான் அந்தோ புயலென்பான்
பார்த்தானே பாவிப் பயல்!

— அ வே. காசிநாதன் பணவாசி.

பொன்னகைகள் தந்திட்டான், பூங்கொடியே! நின்உடனே
புன்னகைதான் தந்திட்டேன்! போதாதா? - பின்னுமவன்
ஆர்ச்செழுந்து வந்தே அதரப்பூத் தேன்பருகப்
பார்த்தானே பாவிப் பயல்.

—புலவர் குமரிமன்னன், சேர்வைநகர்.

கொஞ்சுமொழி பேசியவள் கோடிமுத்தம் தந்ததெல்லாம்
நெஞ்சத்தே நீங்கா நினைவன்றோ - வஞ்சகத்தை
வார்த்தொருவன் எமதுள்ளம் வாடவைத்துக் கண்குளிரப்
பார்த்தானே பாவிப் பயல்.

— நோ தமிழன்பன் காரைக்குடி.

செய்ய குழல்மடவார் சிற்றின்பம் துய்ப்பதிலே
வெய்யோனுக் கென்பகையோ? வீரமகன் - மெய்யிலெனைச்
சேர்த்தே அணைத் தின்பத் தேனூறும் போழ்தெட்டிப்
பார்த்தானே பாவிப் பயல்!

— சோம. திருநாவுக்கரசு, நாச்சியாபுரம்.

அம்புலி காட்டி அமுதூட்டி அன்பொழுகத்
தங்கத் தமிழ்மொழியில் தாலாட்டி - இங்கிதமாய்
பாரில் வளர்த்தவளும் பட்டினியால் சென்றிரக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

— குகன் குருசாமி, கபுதி.

ஒன்றினர் வாழ்வெங்கே ஓங்குநற் பண்பெங்கே
தென்றமிழர் கற்பெங்கே தென்பொதிகைத் தென்றலே!
வார்த்தச் சிலையொத்தாய் வஞ்சியென்று வஞ்சிக்கப்
பார்த்தானே பாவிப் பயல்.

—மு. கோவிந்தராசன், கூத்தப்புடி.

மறைமலையார் பைந்தமிழை மாணற்ற தென்றே
குறைகூறி, யம்மாமிக் கூட்டே - சிறந்ததென
ஏத்திப் புகழ்ந்தான் எழிற்றமிழின் சீரழிக்கப்
பார்த்தானே பாவிப் பயல்!

—சா. நடராசன், சென்னை-12.

பொன்னி நதியின் புதுப்புனலில் நீராட
என்னை அழைக்கிறாய், என்செய்வேன்? - அன்றுநமை
வார்த்த சிலையாகி வைத்தவிழி வாங்காது
பார்த்தானே பாவிப் பயல்.

—மா. இராமலிங்கம் பி. ஏ. குடந்தை.

செஞ்சிறகுச் சிட்டே தினைப்புனத்தில் தீனியுண்டு
கொஞ்சம் உனக்கெடுத்துக் கொண்டிருந்தேன் - வஞ்சகமாய்ச்
சேர்த்துப் பிடித்தெடுத்துச் செல்ல வலைவீசப்
பார்த்தானே பாவிப் பயல்!

—கோ. கஸ்தூரி சென்னை-7.

சிங்கத் தமிழ்க்குலத்தின் சீரியநற் பண்பென்னும்
மங்காத கற்புநெறி மாண்பிருக்க - அங்கத்தில்
ஓர்குறையைப் பார்த்தே உடனோடி எங்கோபெண்
பார்த்தானே பாவிப் பயல்.

—இள. க. இளந்திரையன் திருபுவன-பாளையம்.

செல்லத் தமிழ்மொழியாள் செங்கரும்புச் சாறனையாள்
வெல்ல இதழ்த்தேன் விருந்திட்டாள் - புல்லவுடல்
ஆரத் தழுவுமுன் ஆர்த்தெழுந்து கீழ்வானில்
பார்த்தானே பாவிப் பயல்.

—வி. பாலசண்முகம் சென்னை-7.

"பொன்னே! மணியே! புனையாத காவியமே
மின்னே! இளங்கொடியே! நித்திலமே!-' - என்றெல்லாம்
வார்த்தைகளைக் கொட்டி வலைவீசி வஞ்சிக்கப்
பார்த்தானே பாவிப் பயல்!

—மா. மலையழகன் காஞ்சிபுரம்.

தின்னத் தெவிட்டாத தீங்கனியே! பொற்கொடியே!
உன்னை மணமுடிப்பல் ஊரறிய - என்றுரைத்து;
ஏரில்லாள் வீட்டிருந்தும் ஏழையென்பால் வாலாட்டப்
பார்த்தானே பாவிப் பயல்.

—'முகில்வண்ணன்' செய்துங்கநல்லூர்.

கண்ணாடிக் கன்னமென்றும் கானூறும் வாயென்றும்
மண்ணுடு கண்டஎழில் மாதென்றும் - விண்ணென்றும்
வார்த்தைபல பேசி வசமாக்கிக் கொண்டுசெல்லப்
பார்த்தானே பாவிப் பயல்!

—அன்னபூரணி முருகேசன், திருவேங்கடபத்து

ஓடைக்குள் நீந்தி உடையீர மார்போடு
கோடைப் புழுக்கம் குறைத்தெழுந்தேன் - நாடிமுகம்
வேர்த்தான் விழித்தான் விழியம்பு விட்டதுபோல்
பார்த்தானே பாவிப பயல்!

—அருப்பைக்கிழார்.

"அல்லிக் குளத்திரவே அத்தா னுடனிருந்தாள்
சொல்லாத இன்பம் பல சுவைத்தாள் - முல்லையினை
சேர்த்தான்; அணைத்திட்டான் செக்கர் வானுதவனும்
பார்த்தானே பாவிப் பயல்!"

"—பதிஒளி"

கன்னித் தமிழ்க்குலத்தின் கற்புநெறி கண்டிருந்தும்,
என்னைக் கவர்ந்தவரே ஏற்றுள்ளார் - என்றறிந்தும்
"சேர்த்தின்பம் தந்திடுவாய் சேல்விழியே" என்பதுபோல்
பார்த்தானே பாவிப் பயல்.

—ப. ப. இராமசாமி, மால்மேடு.

ஆசிரியர்: கண்ணதாசன் அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டிணன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு